விலை ரூபா:5.00 பக்கங்கள் 10 *Registered as a News Paper in Srilanka*

# வலம்புரி
VALAMPURI

சங்கு03 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 10 செவ்வாய்க்கிழமை (25.12.2001) தொலைபேசி 3378 ஒலி 06

மல்லிகா மிக்சர் மாளிகை
நறு நறு மொறு மொறு
காரமான சுவையுடன்
ரேஸ்ற்றி பொம்பே ரிப்பீஸ்
ரேஸ்ற்றி ரைற்றானிக் காரவடை
ரேஸ்ற்றி மரவள்ளி பீஸ்
இல 149, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்.



வடபகுதியில் காணாமற் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் நேற்று யாழ்செயலகத்தின் முன்பாக மேற்கொண்ட மறியற் போராட்டத்தின்போது பெற்றோர்கள் யாழ் செயலகத்தின் நுழைவாயிலில் முற்றுகையிட்டு நிற்பதையும் , யாழ் அரச அதிபர் க. சண்முகநாதன் சங்கப்பிரதிநிதிகளுடன் உரையாடுவதையும் ,மறியற் போராட்டத்தினால் யாழ் செயலக வளாகம் வெறிச்சோடிக் கிடப்பதையும் படங்களில் காணலாம் (படம்- கோபி)

## அரசு - புலிகள் பேச்சுக்கு மத்தியஸ்தம் வகிக்க நோர்வேக்கு அடுத்தவாரம் அழைப்பு

# புலிகளின் தடையை நீக்கவேண்டிய சூழ்நிலை அரசுக்கு ஏற்படவில்லை!

## செய்தியாளர் மாநாட்டில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

(புதுடில்லியிலிருந்து நமது நிருபர்)



**தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது பொதுசன ஐக்கிய முன்னணி அரசு விதித்துள்ள தடையை நீக்குவது தொடர்பாக ஆராயக் கூடிய சந்தர்ப்ப சூழ்நிலை இன்னமும் உருவாகவில்லை. இனப் பிரச்சினை தீர்வுக்கான சமாதான முயற்சிக்கு உறுதுணையான அடித்தளம் ஒன்றை அமைத்து அதன் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே எனது முதல் நோக்கமாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக புது டில்லியில் இந்தியத்தலைவர் களைச் சந்தித்து பேச்சு நடத்திய

அச்செய்தியாளர் மகா நாட்டில் விடுதலைப் புலிகளின் தடைநீக்கம் தொடர்பாக செய்தி யாளர் ஒருவர் கேட்டபோதே தெரிவிக்கையில்

இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கூடிய சமாதான நடைமுறைக்கான



எமது வாசகர்களுக்கு நத்தார் வாழ்த்துக்கள்

## செய்தியாளர் மாநாட்டில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

(புதுடில்லியிலிருந்து நமது நிருபர்)



**தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது பொதுசன ஐக்கிய முன்னணி அரசு விதித்துள்ள தடையை நீக்குவது தொடர்பாக ஆராயக் கூடிய சந்தர்ப்ப சூழ்நிலை இன்னமும் உருவாகவில்லை. இனப் பிரச்சினை தீர்வுக்கான சமாதான முயற்சிக்கு உறுதுணையான அடித்தளம் ஒன்றை அமைத்து அதன் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே எனது முதல் நோக்கமாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக புதுடில்லியில் இந்தியத்தலைவர்களைச் சந்தித்து பேச்சு நடத்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று செய்தியாளர் மகாநாடொன்றைக் கூட்டி யிருநதார்.

அச்செய்தியாளர் மகாநாட்டில் விடுதலைப் புலிகளின் தடைநீக்கம் தொடர்பாக செய்தியாளர் ஒருவர் கேட்டபோதே பிரதமர் ரணில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அச்செய்தியாளர் மகாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்

இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கூடிய சமாதான நடைமுறைக்கான அடித்தளம் ஒன்றை ஏற்படுத்துவதே எனது தலையாய நோக்கமாகும்.

(10ம் பக்கம் பார்க்க.)

எமது வாசகர்களுக்கு

**நத்தார் வாழ்த்துக்கள்**



# வீதிச் சோதனை ~ ரோந்துப்பணி வழமைபோல் மேற்கொள்ளப்படும்!

### இராணுவப் பேச்சாளர் சனத் கருணாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் நேற்று நள்ளிரவு முதல் யுதத நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வரும் அதே வேளை, அரச படையணிகளினால் கடைப்பிடிக்கப் பட்டு வரும் மோதல் தவிர்ப்பின் போது படையினரின் வழமையான நடவடிக்கைகளில் எந்தவித மாற்றமும் இல்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்தின நேற்றிரவு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

வழமையாக இடம்பெற்றுவரும் வீதிச்சோதனைகள் நடைபெறும் அதேவேளை தரைவழித் தாக்குதல் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது.

(10ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தத்தை புலிகள் இறுக்கமாகக் கடைப்பிடிப்பர்

### தளபதிகளுக்கு பிரபா உத்தரவு

(வவுனியா)

நேற்று நள்ளிரவுமுதல் அமுலுக்கு வந்துள்ள யுத்த நிறுத்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்போவதாக விடுதலைப் புலிகள் நேற்றிரவு புலிகளின் குரல் வானொலிமூலம் அறிவித்துள்ளனர்.

நேற்று நள்ளிரவு 12 மணிமுதல் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 24ம் திகதி வரை ஒரு மாதகால யுத்த நிறுத்த அறிவிப்பை விடுதலைப் புலிகள் கடந்த 19ம் திகதி அறிவித் திருந்தனர். (10ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ நிரந்தரத் தீர்வு அவசியம்

### *நத்தார் வாழ்த்துச் செய்தியில் யாழ் ஆயர்*




எமது நாட்டில்ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளதால் தமிழ் மக்களின் நீண்டகால விடுதலைப் போராட்டத்திற்கு ஒருமுடிவு வருமா? என்ற ஏக்கத்தோடும் ஓர் நம்பிக்கையோடும் இருக்கின்ற வேளையில் 2001 ஆம் ஆண்டின் பாலக இயேசுவின் பிறப்பு விழாவினை நாம் கொண்டாட முற்படுகிறோம்.

"ஒரு குழந்தை நமக்கு பிறந்துள்ளான். அவர் திருப்பெயரோ அமைதியின் அரசர் என்று அழைக்கப்படும். அந்த அமைதியின் அரசை கொண்டாடும் காலம் கிறிஸ்மஸ் காலம் அகும். தமிழ் மக்களாகிய நாம் மிக நீண்ட காலமாக போரையும் அதன் அழிவுகளையும் இடம்பெயர் அவலங்களையும் எமது அனுபவங்களாக்கியுள்ளோம் இனிப் போர்வேண்டாம், போர் முழக்கங்கள் வேண்டாம், இடம்பெயர்வுகள் வேண்டாம், உயிர் அழிவுகள் வேண்டாம்-அமைதி வேண்டும், நிம்மதி வேண்டும், சமாதானம் வேண்டும் என்ற நிலையிலேதான் நாம் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழாவை அணுகுகிறோம்.

அமைதி வருகிறது, சமாதானம் வருகிறது, பேச்சு வார்த்தை வருகிறது, யுத்த நிறுத்தம் .. (10ம் பக்கம் பார்க்க)

## பிறரை மகிழ்விப்பதாக கிறிஸ்மஸ் அமையட்டும்

*பேராயர் ஜெபநேசன்*



வளர்ந்து வரும் வலம்புரி மூலமாக யாழ் மக்களிற்கு கிறிஸ்மஸ் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்

இரண்டாயிரம் வருடங்களிற்கு முன்னர் தேவதூதர்கள், கர்த்தராகிய யேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கின்றார் என்ற நற்செய்தியை அறிவித்தனர்.

மூன்று ஞானிகளும், சில

( 10ம் பக்கம் பார்க்க..)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

நல்லூர் பிரதேச சபை

# நல்லூர் கொக்குவில் உப - அலுவலகங்கள்

## 1. ஆதனவரி அறிவித்தல் 2002

1987ம ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச்சட்டம் இல: 15இன் கீழ் அதற்கு உரித்தாகப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதனவரி அறவீடு கொக்குவில் உப-அலுவலக எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு சென்ற வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2002ம ஆண்டு அறவீடு செய்யப்பட வேண்டுமெனவும் நல்லூர் உப-அலுவலக எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு 2ம் கந்தாயம முடியும வரை சென்ற ஆண்டு வரிவிகிதத்தின் படியும் 3ம் கந்தாயம் தொடக்கம் தறபொழுது மீளாய்வு செய்யப்பட்டுவரும் வரிவிகிதத்தின் பிரகாரமும் அறவீடு செய்யப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் உப-அலுவலகத்திற்கு உட்பட்ட ஆதனங்களுக்கு 2002ம் ஆண்டுக்கான ஆதனவரியை 31-01-2002 திகதிக்கு முன்னர் முழுத்தொகையையும் செலுத்துவோருக்கு 10% கழிவும் 31-01-2002, 30-04-2002, 31-07-2002 31-10-2002 ஆகிய திகதிகளுக்கு முன்னர் முறையே 1ம், 2ம், 3ம், 4ம் கந்தாயங்களின் ஆதனவரியை செலுத்துமபட்சத்தில் 5% கழிவு வழங்கப்படும். நல்லூர் உப-அலுவலகத்திற்குட்பட்ட ஆதனங்களுக்கு 1ம், 2ம் கந்தாயங்களுக்கான வரியை 31-01-2002ம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு 10% கழிவும், 31-01-2002, 30-04-2002ம் திகதிக்கு முன் முறையே 1ம், 2ம் கந்தாயங்களை செலுத்தும் பட்சத்தில 5% கழிவும் வழங்கப்படும்.

அந்தந்த கந்தாயத்தின முடிவுக்குள் ஆதனவரியை செலுத்தத்தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக்காணிகளுக்கும் 15%ம் ஏனைய ஆதனங்களுக்கு 20%ம் விறாந்துக்கட்டணமாக வரியுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டுமென அறியத்தருகின்றேன்.

எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31-01-2002ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாக செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**குறிப்பு :**

01. 2001ம் ஆண்டு முடிவுள்ள வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 2002ம் ஆண்டிற்கான வரி ஏற்றுக்கொள்ளப்படும்.
02. சேதமடைந்ததும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரிவிலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் 31-01-2002ற்கு முன் கிடைக்கக்கூடியதாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
03. நல்லூர் உப-அலுவலகற்திற்கான வருடாந்த வரி பற்றிய அறிவுறுத்தல் பத்திரம் (கே படிவம்) மீள் மதிப்பீடு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் ஏப்ரல் மாதத்தின் பின்னரே வழங்கப்படும்.

## 2 வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்

நல்லூர் பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள் மதில், மலகூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகவே கட்டடங்கள், மதில், மலகூடங்கள் என்பன கட்டுவதற்கும் பழையவற்றைப் புதுப்பிப்பதற்கும் பிரதேச சபையில் இருந்து பெறப்படும் முறையான விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து நல்லூர் பிரதேசசபையின் முன் அங்கீகாரம் பெறுதல்வேண்டும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படுமென அறியத்தருகின்றேன்.

## 3 2002ம் ஆண்டிற்கான வியாபார உரிமம்

நல்லூர பிரதேசசபைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் தங்கள் வியாபார நிலையங்களுக்காக விண்ணப்பப் பத்திரத்தை நல்லூர் பிரதேசசபையின் உப - அலுவலகங்களில் பெற்று 10-01-2002ம திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்து காரியாலயங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் 2002ம ஆண்டு பங்குனி 31ம் திகதிக்கு முன்னர் உரிமக்கட்டணத்தை செலுத்தி வியாபார உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளும்படியும் கேட்டுக்கொள்கின்றேன் 31 - 03 - 2002ம் திகதிக்குப் பின்னர் வியாபார அனுமதிப்பத்திரமின்றி எவ்வித வர்த்தக நிலையங்களும் அனுமதிக்கப்பட மாட்டாது என அறியத்தருகின்றேன்-

## 4 படவரைஞராக பதிவுசெய்தல்

2001ம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்தவர்கள் தங்கள் அனுமதியை 31 - 01 - 2002ம திகதிக்கு முன்னர் புதுப்பித்துக் கொள்ளுமாறும் புதிதாகப் பதிவு செய்பவர்கள மேற்படி திகதிற்கு முன்னர் அதற்கான ஆவணங்களை சமர்ப்பித்து சபையின் அனுமதிபெற்று பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## 5 மீள் கேள்வி அறிவித்தல்

கேள்விப்பத்திர விநியோகம:- 27 - 12 - 2001 நண்பகல் 12.00மணி வரை.
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 28 - 12 - 2001 மு.ப 10.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 28 - 12 - 2001 பி. ப 2-00 மணி
ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கமைய கேள்விகள் கோரப்படுகின்றன.

### அறிவித்தல் - 1

| இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்ததொகை (ஜீ எஸ்.ரி தவிர்ந்தது) |
|---|---|---|---|
| கொக்குவில் உப-அலுவலகம் | | | |
| 1. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 350-00 | 3000-00 | 145350-00 |
| 2. கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 350-00 | 3000-00 | 45200-00 |
| 3. கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 350-00 | 3000-00 | 40000-00 |

### அறிவித்தல் II

| | | | |
|---|---|---|---|
| கடை இல. 36 | 500-00 | 10000-00 | 324000-00 |
| கடை இல: 38 | 500-00 | 10000-00 | 324000-00 |
| கடை இல. 39 | 500-00 | 10000-00 | 324000-00 |

க. மணிபல்லவராஜன் ஜே. பி. யு. எம்.
தலைவர்
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
24-12-2001.

(சி 3035)

# ஈழத்துச் சிதம்பர தேர்த் திருவிழாவில் தமிழக கலைஞர்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன் கோவிலில் எதிர்வரும் 29ஆம் திகதிநடைபெறவுள்ள தேர்த் திருவிழாவிலும் அன்றிரவு இடம்பெறவுள்ள ஆருத்திரா அபிஷேகத்திலும் இசைமாரிபொழிவதற்கு தமிழகத்திலிருந்து நாதஸ்வர. தவில் வித்துவான்கள் வரவுள்ளனர்.

நாதஸ்வர வித்துவான்களான எழில்இசை திலகங்கள் மாம்பலம்எம் கே எஸ்.சிவா, மாம்பலம் எம். கே எஸ். நடராஜன் சகோதரர்களும், இசைஞானமணி ஜி கோதண்டராமனும், தவில் வித்துவான்களான கலைமாமணி திருப்பூந்துரர் ரி ஜி. முத்துக்குமாரசுவாமி, தவில்நாதமணி என். ஆர் இராமநாதன் ஆகியோர் சேர்ந்த கலைஞர் குழுவே இங்கு வரவுள்ளது.

(எ)

# தொடரும் மழையால் பரீட்சார்த்திகள் இன்னல்

(கோப்பாய்)

க. பொ. த. சாதாரண பரீட்சையில் ஆரம்பநாள் தொடக்கம்மழை பெய்வதால் பரீட்சார்த்திகள் பல விக சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள சில பாடசாலைகளின் கூரைகளிலிருந்து மழை ஒழுக்கு ஒரு புறமும், தூவானம் மறுபுறமுமாக பரீட்சார்த்திகளுக்கு மட்டுமன்றி மேற்பார்வையாளர்கட்கும் இடையூறுகளை ஏற்படுத்துவதாகவும்,

போக்குவரத்துச் செய்வதில் இவர்கள பல இடைஞ்சல்களுக்கு ஆளாவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது

(உ- 79)

# கட்டுப்பாடற்ற பகுதிக்கு உழவு இயந்திரம் செல்ல தொடர்ந்தும் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு உழவு இயந்திரங்கள், லொறிகள் சென்று வருவதற்கான தடை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்தும் தடை தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழன்முதல் அனுமதிப் பத்திரம் பெற்று இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு வாகனங்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் வலையிறவுப் பாலத்தினூடாக உழவு இயந்திரங்களோ, லொறிகளோ செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை யெனவும் இது குறித்து படைத்தரப்பினரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாகவும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

(உ-5)

## இராசி பலன்

25- 12- 2001
மார்கழி 10 செவ்வாய்
தசமி பி. ப 5- 19
அச்சுவினி ந. இ 12. 15
இராகு 3. 26- 4. 56
சுபநேரம் 10. 56- 12. 26
அமிர்த சித்தம்

**மேடம்**
தொழில் முயற்சி, சயன சுகம், உறவினர்வருகை, புதிய திட்டம்.

**இடபம்**
தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், நண்பர் உதவி, வாக்கு மேன்மை.

**மிதுனம்**
சென்ற இடத்தில் சிறப்பு. உறவினர் வருகை, முயற்சி நிறைவேறும், பிரயாசை.

**கடகம்**
புதிய சிந்தை, முயற்சி தாமத, மனப்பதற்றம், செலவு, குடும்பக் கவலை.

**சிங்கம்**
நண்பர்களால் நன்மை, காரியதாதம், தேகஆரோக்கியம்.

**கன்னி**
முயற்சி வெற்றி, பொருள் வரவு, ஜனவசியம, உறவினர்களால் நற்பயன்.

**துலாம்**
தொழில் வெற்றி, புதிய பொருள சேர்க்கை, பகைவர் விலகுவர், தாய்வழிஉதவி.

**விருச்சிகம்**
முயற்சி தாமதம், பிள்ளைகளால் கவலை, மனக்கிலேசம், தூரத்துஉறவினர்உதவி.

**தனுசு**
ரோக பயம், புதிய தொழில் முயற்சி, பணவிரயம், திடீர் பயணம்.

**மகரம்**
முயற்சிநிறைவேறும், புதிய பொருள்வரவு. நண்பர்களால் உதவி, ஜனவசியம்.

**கும்பம்**
முயற்சி தாமதம், போசன சுகம், அமைதிக் குறைவு, மனப்பதற்றம்.

**மீனம்**
காரிய வெற்றி, உறவினர் வருகை, செல்வாக்கு, பணவரவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

-வளவன்

# குளத்துநீர் வீண்விரயம்

(கோப்பாய்)

கோப்பாய்ப்பகுதியிலமைந்துள்ள அம்மன்குளத்தின் சுருங்கையி லேற்பட்டிருந்த வெடிப்பைத் தொடர்ந்து பெருமளவு நீர் தற்போது வீண்விரயமாகி வருகிறது.

அத்துடன் நீர்வெளியேறும் போது பலஒழுங்கைகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிய வருகிறது. கூடுதலான வடிகால்கள் இக்குளத்தை வந்தடைவது குறிப்பிடத்தக்கது

இச்சுருங்கை சேதமடைந்துளளமை பற்றிச் சம்மந்தப்பட்டவர்களுக்கு பலதடவைகள் முறையிட்டும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளாமையே நீர் வீண்விரயமாகக் காரணமாக அமைந்தது எனக் கூறப்படுகிறது.

# தி. மு. க மத்திய அரசிற்கு ஆதரவு

(சென்னை)

மத்திய அரசு எடுக்கும் எந்த பயங்கரவாத எதிர்ப்புநடவடிக்கைகளுக்கும் நாம்ஒத்துழைப்புக் கொடுத்து வருகிறோம் என்று தி.மு. க தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில அவர் பேசுகையில்; நாட்டின் பாதுகாப்புக் குறித்த எல்லா நடவடிக்கைகளிலும், தமதுகட்சி எப்போதுமே ஆதரித்து வந்ததாகக் கூறியிருக்கிறார்.

(து)

# பாலன் பிறந்த நாளினை பாவால் தொழுதிடுவோம்

## அருள் தனையே தாராயோ

வார்த்தையான இறையவனின்
இனியவனே பாலகனே
ஏழ்மையிலே எளிமையிலே
பிறந்தவனே தூயவனே
உலகமது உயர்வுபெற
உன்னருளை தாராயோ.

குடிலினிலே பிறந்திட்ட
குழந்தையே சோமகனே
குவலயத்து மக்களெல்லாம்
அன்புறவு கொண்டிடவும்
பண்போடு பகிர்ந்திடவும்
ஆசிதனை தாராயோ.

தன்மானத் தமிழினத்தின்
அடிமை விலங்கொடித்து
அகதி நிலை இல்லாமல்
அனைத்து தடையகன்று
ஆனந்தமாய் வாழ்வதற்கு
அருள்மாரி பொழியாயோ!

கீழ்வானின் தெரிகின்ற
சமாதான ஒளி சமிஞ்சை
நிரந்தரமாய் நிலைத்திடவும்
நிம்மதியாய் மக்களெல்லாம்
மகிழ்வுடனே வாழ்ந்திடவும்
நின் கருணை காட்டாயோ!

இ. அ. அமலரட்ணம்
க. கு. அங். இல. 05

## சாந்தி மலர்ந்திடவே!

★ இயேசு பாலன் பிறந்துவிட்டார்
இனி எங்கும் அமைதிதானே
நேசமைந்தன் அவதரித்தார்
நேயம் எங்கும் தங்கிடுமே!

★ பாவ இருளை அகற்றிடவே
பாலன் இயேசு உதித்துவிட்டார்
தேவன் இலலம் நாமடைய
தெளிவாய் வழியது காட்டுகின்றார்!

★ இத்தரையில் அமைதி ஓங்கி
இனிமை எங்கும் தங்கிடணும்
யுத்தமதன் சத்தம் நீங்கி
யுகங்க ளெல்லாம் மகிழ்ந்திடணும்!

★ பாலன் இயேசு பதம்பணிந்து
பாவங்களைக் கழுவிடுவோம்
ஓலமற்ற புது வாழ்வை
ஒன்றிணைந்து பெற்றிடுவோம்!

-சூரியநிலா-
ஈச்சமோட்டை

## தண்ணளியாளனை நாடு

நல்லுறவு நல்லிணக்கம் நம்பிக்கை நிலைபெறவே
நத்தாராம் இந்நாளில் இயேசு பாலனை
வேண்டுகின்றோம்
ஈழத்திரு நாடு சாந்தியோடு சமாதான வாழ்வடைய
இத்தினத்தில் இரட்சகரை இசையோடு துதிக்கின்றோம்
போரோய்வும் பொருளாதார தடைடகலவும்
பல காலம் நீடித்திட நித்திரை விழித்திருந்து
மீட்பரின் பிறப்பிதனை பாடியே நிற்கின்றோம்
அகதி வாழ்வும் அல்லோலங்களும் அகன்றிடவும்
ஆனந்தமாய் மக்கள் ஆட்சி நடத்திடவும
அப்பமரியாளை ஆராதித்து ஏத்துகின்றோம்
தமிழினம் தலை நிமிர விடுதலை விரைந்து வர
தண்டனைகள் தனைச்சுமந்த தண்ணளியாளனை
தேம்பித் தேம்பி இன்று எம் தேசம் அழைக்கின்றோம்.

எம். எஸ். எஸ். கீர்த்தி

## பாலனே என் ஜேசுதேவனே!

போதனைகளைச் சொல்லி வேதனைகளை சுமந்தவரே
வேதனைகளையும் மறந்து எம் பாவங்களை சுமந்தவரே
வேதனைகள் தாங்காது சுதந்திரமின்றிவாடுகின்றோம்
வேதனைகளை தீர்த்திடுவீர்பாலனே என்ஜேசுதேவனே!

நேசிக்கின்றோம் பாலனே உம்மையாசிக்கின்றேம்
நேசமுடன் நாம் விளையாடி மகிழும் நத்தார்பாப்பாவே
உன் வயிற்றுக்குள்ளும் வெடிகுண்டிருக்குமோ? என
என் சிந்தை வெடியோசைகளால்சிதறுண்டு இருக்கிறதே

தேசமெலாம் வெடியொலிகள் மறையவேண்டும்
நேசமாக மக்கள் எல்லாரும் வாழ வேண்டும்
இரங்கி அருள்வீரே! தேவவே! இறைஞ்சுகின்றேன்!
இனிமைகள் சேர சாந்தி சமாதானம் வர உதவுமையா!

ச. நிஷாந்தி
'சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி'

# மனநோயாளர்கள் தங்கியுள்ள விடுதியில் மழைநீர் தேக்கம்

## ஆஸ்பத்திரி நிர்வாகம் பாராமுகம்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் மன நோயாளர் சிகிச்சைப் பிரிவின் கூரைகள் சேதமடைந்துள்ளமையினால், கூரைகளினூடாக ஏற்படும் ஒழுக்கால் விடுதியில் பெருமளவு நீர்தேங்கியுள்ளது.

இருந்த போதிலும் நோயாளர்கள் அவ் விடுதியினுள்ளேயே பூட்டப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இங்கு 12 மன நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றநிலையில், அவர்களது அசௌகரியத்தைப் போக்க எந்தவொரு நடவடிக்கையும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் எடுக்காமை தொடர்பாக, மன நோயாளர்களை மேலும் நோயாளர்களாக ஆக்கும் மனுநீதியற்ற நடவடிக்கை இதுவென பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, பழைமை வாய்ந்த இக்கட்டடத்தினை திருத்தியமைக்கும் பொருட்டு கட்டடத் திணைக்களத்தினரால் மதிப்பீடு செய்யப்பட்டு நீண்ட காலமாகியும் இதனைத் திருத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## பரீட்சை ஒத்திவைப்பு

(மந்திகை)

ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையின் கீழ் தபால் திணைக்களத்திலடமையாற்றும் சிற்றூழியர்கள், உபதபால் அதிபர்களைத் தரமுயர்த்துவதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் ஜனவரி6ஆம் திகதி நடைபெறுமென தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பரீட்சை இம் மாதம்23 ஆம் திகதி நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

(உ-23)

## துப்பாக்கி வேட்டால் மக்கள் பதற்றம்

(மந்திகை)

பருத்தித்துறை கோவிலடிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4 மணியாளவில் தொடர்ச்சியான துப்பாக்கி வேடுச்சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன

தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தமையால் இச் சத்தத்தினால் அயற் பகுதி மக்கள் பெரும் பதற்றமடைந்து காணப்பட்டனர்.

(உ-23)

## கலந்து உரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக்கிளை நடாத்திவரும்கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மென்பந்து கிரிக்கெட் ஆகிய போட்டிகளுக்கு விண்ணப்பித்த குழுக்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகயாழ்.மாவட்டச் செயலாளர் கு.குமாரசாமி அறிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடலில், விளையாட்டுக்களில் பங்கேற்க விண்ணப்பித்த குழுக்களின் பொறுப்பாளர் அல்லது அணியின் தலைவரை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## ஊழியர் படுகாயம்

(மந்திகை)

பருத்தித்துறை இறங்குதுறையில் ஹண்டி கப்பலில் இருந்து பொருட்களை இறக்கிக் கொண்டிருந்த வேளை, பாஜ்ஜினுள்கால் அகப்பட்டு, காலில் படுகாயமடைந்த நிலையில் ஊழியர் ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி ஆண்டாள் வளவைச் சேர்ந்த குலசிங்கம் ரமணன்(வயது21) என்பவரே காலில் காயமடைந்துள்ளார். [உ-23]

## வளலாய்ச் சந்தை மீண்டும் இயங்கவுள்ளது

(நவக்கிரி)

கடந்தகால போர் அனர்த்தங்களினால் சேதமடைந்த காரணத்தினால் இயங்காதிருந்த வளலாய்ச் சந்தை மீண்டும் இயங்கவுள்ளது.

மேற்படி சந்தை 30 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டதையடுத்து வளலாய் கலைக்கதிர் சனசமூக நிலையத்தினால் நிர்வகிக்கப்படவுள்ளது.

(உ-233)

# சங்கே முழங்கு

## பெற்றோலியக் கூ. தாபன உயரதிகாரியின் கூற்று உண்மைக்குப் புறம்பானது

பெற்றோலியக் கூட்டுத் தாபன காங்கேயன் துறைக் களஞ்சியத்தில் போதியளவு மண்ணெண்ணெய் கையிருப்பில் இருப்பதாகவும், தட்டுப்பாடு ஏற்படுவதற்கு இடமில்லைஎனவும்சிலபலநோக்கு கூட்டுறவுசங்கங்கள் தமக்குத் தேவையான எரிபொருளுக்குரிய கொள்வனவுக் கட்டளைகளை அனுப்புவதில அசமந்தப் போக்கை கடைப்பிடிப்பதனால் எம்மால் எரிபொருளை அனுப்ப முடியாதுள்ளது எனப் பெற்றோலியக் கூட்டுத்தாபன உயர் அதிகாரி ஒருவர்தெரிவித்ததாகக்கூறி19-12-2001 திகதியவலம்புரிப பத்திரிகையின் 8ஆம பக்கத்தில் காங்கேயன் களஞ்சியத்தில் மண்ணெண்ணெய் தாராளம்' என்ற தலையங்கத்தில் பிரசுரிக்கப்பட்ட செய்திஎமது சங்கானை ப.நோ.கூ. சங்கப் பாவனையாளர் மத்தியில் சங்க நிர்வாகத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது.

எமது சங்கம் பெற்றோலியக் கூட்டுத்தாபன வடபிரதேச முகாமையாளருக்கு 09.10.2001 தொடக்கம் 15.12.2001 வரையும் 39 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணெய் கொள்வனவுக்கு, கொள்வனவுக் கட்டளைகளுடன் காசோலைகள் அனுப்பப்பட்டபோதும் இக்காலப பகுதிக்குள் எமது சங்கத்துக்கு தரப்பட்ட மண்ணெண்ணெய் 13 ஆயிரத்து 200 லீற்றர் மட்டுமேயாகும்.

எனவே இவற்றை எமது பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் 11ஆயிரத்து 200குடும்பங்களுக்கு வழங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் 15 ஆயிரம் லீற்றர் பெற்றோலுக்கு விண்ணப்பித்து காசோலை அனுப்பப்பட்ட போதும் எமக்குத் தரப்பட்டது 9 ஆயிரம லீற்றர் பெற்றோலாகும்.

அத்துடன் இக்காலப்பகுதியில் 19 ஆயிரத்து 800 லீற்றர் டீசல் கொள்வனவுக்கு காசோலை அனுப்பியிருந்த போதும் எமது சங்கத்துக்கு வழங்கப்பட்ட டீசல 9 ஆயிரத்து 900 லீற்றர் ஆகும்.

எனவே தங்கள் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுளளவாறு சங்கங்கள கொள்வனவுக் கட்டளைகளை அனுபபுவதில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதினால் எம்மால எரிபொருளை அனுப்ப முடியாதுளளது' பெற்றோலியக் கூட்டுத்தாபன உயர்அதிகாரி ஒருவர் கூறியது அப்பட்டமான பொய்யாகும். எனவே எமது சங்கப் பாவனையாளர்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியை போக்கி உளளதை உள்ளவாறு பிரசுரிக்கும் தங்கள் பத்திரிகை தருமத்துக்கு ஏற்ப இச் செய்தியை தங்கள் பத்திரிகையில் பிரசுரித்து எமது சங்கப்பாவனையாளர் மததியில் ஏற்பட்டுளள அதிருப்தியை நீக்க உதவவும்.

ம. சற்குணலிங்கம்
தலைவர்
சங்கானை ப.நோ.கூ. சங்கம்
சங்கானை.

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை
### சுன்னாகம்

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2002

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும், சேவைகளையும், வேலைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 31. 12. 2001ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

### பொருட்கள்

01. காகிதாதிகள், எழுதுபொருட்கள்.
02. அலுவலக உபகரணங்கள்.
03. மேல்நாட்டு வைத்திய உபகரணங்கள்.
04. சித்த மருத்துவ மூலிகைகள் மருந்துகள்.
05. சீருடைத் துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணிகள்.
06. பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோற் பொருட்கள்.
07. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம் முதலியன.
08. சுத்திகரிப்புப் பிரிவுக்கான கிருமிநாசினிகளும் மருந்துகளும்.
09. வேலைப் பகுதி / சுத்திகரிப்புப் பகுதிக்குத் தேவையான மண்வெட்டி, அலவாங்கு, பிக்கான் போன்றன.
10. நூலகங்களுக்குரிய நூல்கள்.
11. கட்டடப் பொருள்கள் (சீமெந்து, கூரைத்தகடு, ஓடுகள் முதலியன)
12. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருட்கள், முதலியன.
14. கற்கள், மணல்கள்
14. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள்.
15. வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர், ரியூப் முதலியன.

### சேவைகள்

01. அச்சிடுதல், புத்தகங்கள் கட்டுதல்.
02. தட்டச்சு இயந்திரம் திருத்தம்
03. மோட்டார் வாகனங்கள் திருத்தம்.
04. இறப்பர் முத்திரை தயாரித்தல், புளொக் தயாரித்தல்.
05. சீருடை தைத்தல்.
06. வாகனங்கள் சேவிஸ் செய்தல்
07. கணனியையும் அதன் உதிரிப்பாகங்களையும் திருத்துதல்.
08. நிழற்படப்பிரதி இயந்திரத்தையும் அதன் உதிரிப் பாகங்களையும் திருத்துதல், தொலைநகல் (Fax) திருத்துதல்.
09. மின்சார உபகரணங்களைத் திருத்துதல்.
10. நீரிறைக்கும் இயந்திரம், மின் மோட்டார் திருத்துதல், கைப்பம்பி திருத்துதல்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படும் ஆயினும் வேறு இடங்களிலிருந்து கூறுவிலைகள் கோரவும் பிரதேசசபைக்கு உரிமை உண்டு.

கோரப்படும் பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருள்கள் / சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள் /சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

### வேலைகள்

1. கட்டிடங்கள் நிர்மாணமும், பராமரிப்பும்.
2. வீதிகள் நிர்மாணமும், பராமரிப்பும்.
3. வடிகால்கள், மதகுகள் நிர்மாணமும்பராமரிப்பும்.

### வேலை ஒப்பந்தகாரர்களுக்கான தகைமைகள்

இலங்கை நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவகத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள்.

அல்லது

அரச திணைக்களங்களில் ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கு அத்திணைக்களங்களால் வழங்கப்படும் பதிவுப் புத்தகங்களை உடைய ஒப்பந்தகாரர்கள்.

அத்துடன்

கடந்த 2 வருடங்களுள் எந்தவொரு அரசதிணைக்களங்களிலும் ஒப்பந்த வேலைகள் சம்பந்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படாதவர்களாக இருத்தல்.

அத்துடன்

கடந்த காலங்களில் எமது சபையில் ஒப்பந்த வேலைகளை திருப்திகரமான முறையில் நிறைவேற்றியவர்கள்.

### வேலை ஒப்பந்தகாரர்களுக்கான நிபந்தனைகள்

1. சபையானது எந்தவொரு அல்லது அனைத்து விண்ணப்பத்தினையும ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும உரிமையையும,
2. தேவையேற்படும் பட்சத்தில் எந்தவொரு வேலைக்கும் பதிவு செய்யப்பட்ட பட்டியலுக்கு புறம்பாய்க் கேள்வி கோரும் உரிமையையும்,
3. அவ்வருடத்துள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தங்களை இடைநிறுத்தும உரிமையையும் கொண்டிருக்கும.

பொருட்கள் வழங்கல் சேவைகள் விண்ணப்பத்துடன் 100/- பெறுமதியான தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்ற பெயருக்குப் பெறப்பட்ட காசுக் கட்டளை/தபாற் கட்டளையை இணைத்து அனுப்ப வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் எமது பிரதேச சபையின் பணிமனையில் நேரடியாகச் செலுத்த முடியும். வேலைகளுக்குப் பதிவு செய்வதற்கு பதிவுக்கட்டணமாக ரூபா 10,000/- கோரப்படும். (மேற்குறிப்பிட்ட கட்டணம் ஒப்பந்தப் பதிவு காலாவதியாகும் போது எவ்வித மேலதிகக் கொடுப்பனவுமின்றி மீளளிக்கப்படும்.)

கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல்கள் சேவைகள் 2002ம் ஆண்டெனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

வழங்கல்களுக்கும் சேவைகளுக்கும் வேலைகளுக்குமான விண்ணப்பங்கள் ''தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்'' என முகவரியிடப்பட வேண்டும். ஒவ்வொரு வழங்கல் சேவை வேலைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

**க. கமலசேகரன், ஜே. பி. யு. எம்.**
தலைவர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2001-12-19 (C/3068)


# திருக்கேதீஸ்வர ஆலய புனரமைப்பு; ஆரம்பிக்குமாறு அமைச்சர் பணிப்பு

(மன்னார்)

திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண வேலைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் மன்னார் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகாநாட்டில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் வரலாற்றுச் சிறப்புடைய இந்தஆலயத்திற்கு திருப்பணிகளுக்கான நிதி எனது அமைச்சிலிருந்து வழங்கப்படும். குடிநீர், விநியோகம் 24 மணி நேர மின்விநியோகம் என்பன சீராக நடைபெற ஒழுங்கு செய்யப்படும்.

ஆலயத்தின்வீதிகள் திருத்தி அமைக்கப்படும். மன்னார் நகரிலிருந்து ஆலயத்திற்கு போக்குவரத்து வசதிகள் செய்யப்படும் பக்தர்கள் ஆலயத்திற்குசுதந்திரமாகச்சென்று வழிபாடு செய்வதற்கு சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்என்று கூறினார்.

அமைச்சர் இதற்கு முன் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்குச்சென்று வழிபாடு செய்ததோடு, ஆலய அறங்காவலர் சபையினருடனும் மன்னார், வவுனியா அரசாங்க அதிபர்களுடனும் ஆலய கட்டடங்களையும் சுற்றாடலையும் பார்வையிட்டார். (எ)

# சாந்தி, சமாதானத்திற்கு ஒத்துழைக்க வேண்டும்
## ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

(மட்டக்களப்பு)

சாந்தியும் சமாதானமும் உள்ள நாடாக எமது நாடு வளர்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று மட்டக்களப்பு- திருமலை மறை மாவட்டஆயர்கலாநிதி அதிவண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை நத்தார், புத்தாண்டை முன்னிட்டுவிடுத்த செய்தியில்தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில்அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது; விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தையும், அரசாங்கம் மோதல்தவிர்ப்பையும்கடைப்பிடித்திருப்பது இந்நாட்டிற்கு ஆரோக்கியமான ஒரு எதிர்காலம் உண்டென்பதைக் காட்டுகின்றது.

ஜனவரி 1 ஆம் திகதியை அரசு சகோதரத்துவ நாளாக பிரகடனம் செய்தமை இனபேதமற்ற புதிய கலாசாரத்தின் ஆரம்பத்தைக் குறிக்கிறது. (எ)


## பருத்தித்துறை நகராட்சி மன்றம்
## ஆதன வரி-2002

255 ஆம் அதிகாரமான நகர சபை கட்டளைச் சட்டத்தின் 166 ஆவது உப-பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், பருத்தித்துறை நகராட்சி மன்றம் குறித்த கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள தத்துவத்திற்கமைவாக பின்வருமாறு வரியிறுப்பாளருக்கு அறிவித்தல் செய்கின்றது.

1. பருத்தித்துறை நகராட்சி மன்றஎல்லையினுள் உள்ள அனைத்து ஆதனங்களிற்கும் 2001 ஆம ஆண்டில் அறவிடப்பட்ட விதமாக அவற்றின் வருடாந்தப் பெறுமதியில் 12 சதவீதமான தொகை ஆதன வரியாக விதித்து அறவிடப்படும்.
2. அ) குறிப்பிட்டசதவீத வரிப்பணங்கள்யாவும்நான்கு சம கந்தாயத் தவணையில் 2002 ஆம ஆண்டு முறையே மார்ச் 31, ஜுன் 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும.
   ஆ) 2002 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு 10% (பத்து வீதம்) கழிவு அனுமதிக்கப்படும். என்பதுடன், வருமதியாகவுள்ள அந்தக் கந்தாயத்துக்குரிய முதல் மாதத்துக்குள்ளாக கந்தாய வீதம் செலுத்தப்பட்டால் 5% (ஐந்து வீதம்) கழிவு அனுமதிக்கப்படும்.
3. மேற்குறிப்பிட்ட பந்தி 2 (அ) இன்படி சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து, வெற்றுக் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% (பதினைந்து வீதம்) மற்றும் சகல ஏனைய இடங்கள மீது 20% (இருபது வீதம்) வீதத்திலுமான விறாந்துச் செலவு அறவிடப்படும்.

**நா. மணிவண்ணன் ஜே.பி.யு.எம்.**
உபதலைவர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

**ச. அன்ரன் கிறைசிஸ்**
செயலாளர்,
நகராட்சி மன்றம், ருத்தித்துறை.
நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை. [C-3034]


## சாகித்திய விழா தொடர்பான கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சாகித்திய விழா தொடர்பான கூட்டம் நாளை புதன் கிழமை இடம் பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பி.1.30மணிக்கு மேற்படி கூட்டம் ஊர்காவற்றுறை பிரதேச கலாசார சபையின் தலைவரும் உதவி அரசாங்க அதிபருமான ஜே. எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-75)

## சமாதான தீபம்

(மீசாலை)

நாட்டில் சமாதானம் மலர்ச்சி பெறவேண்டும் என்ற நோக்கில் சமாதானதீபம்ஏற்றும் வைபவம் கடந்தசனிக்கிழமை வடமராட்சியில்நடைபெற்றது.

வடமராட்சி பிரதேச சுயிர்ப்பூட்டல் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வைபவம் மாலை 3மணியளவில் செல்வாபுரத்தில் ஆரம்பமாகியது அங்கிருந்து மக்கள் ஊர்வலமாக கண்பொல்லை இராஜகிராமம்வழியாக நவக்கிரிவரை சென்று தீபங்களை ஏற்றினர். (ஏ-229)

## திருவெம்பாவை பாடல் ஓதல்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி மாணிக்கவாசகர் மன்றத்தினரால் திருவெம்பாவையை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் அதிகாலை வேளைகளில் திருவெம்பாவைப்பாடல் ஓதப்பட்டு வருகிறது. இறுதி நாளான எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை3. 30மணியளவில் வெள்ளெருவைப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து மாணிக்கவாசகசுவாமிகளின் உருவப் படம் தாங்கிய ஊர்தி புறப்பட்டு வழமை போன்றுகிராம வீதிகளில் வீதியுலா வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ- 79)

# கலையுலகிலும், அரசியலிலும் தனித்துவம் பெற்ற
# எம். ஜீ. ஆர். ஈழமக்களை என்றும் நேசித்தவர்

'உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால் உலகத்தில் போராடலாம்'

நத்தார் தினம் வருகிறது என்றால் கூடவே மக்கள் திலகமும் வருவார். ஆம் உலக பிதாவின் புனித நாள் மக்கள் திலகத்தின் நினைவு நாள் அல்லவா!

ஈழத்தமிழ் மக்களால் என்றும் மறக்க முடியாதவர் புரட்சித் தலைவர் எம். ஜீ. ஆர். தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் அன்றும், இன்றும் தமது சொந்த அரசியல் நலனுக்காக; தமிழ் நாட்டுமக்களிடமிருந்து வாக்குகளைப் பெறுவதற்காக ஈழமக்கள் மீது; அவர்களின் பிரச்சினைகள் மீது கரிசனை காட்டுவது வழக்கமான நடவடிக்கையாகும். ஆனால் எந்த இலாபமும் கருதாமல் ஈழமக்களின் துயர் துடைக்கும் உதவும் சரமாகத் திகழ்ந்தவர் எம் ஜீ. ஆர். ஈழமக்களின் பிரச்சினையைப் பேசி வாக்கு கேட்க வேண்டிய தேவை அவருக்கு இருந்ததில்லை என்பதை உலகறியும். நமது துரதிர்ஷ்டம் காலன் அவர் உயிரைப் பறித்துக் கொண்டான்.

### சினிமா உலகில்

திரைப்படங்கள் இளம் சமூகத்தைச் சீரழித்துக் கொண்டு இருக்கிறது. என்பது பொதுவான கருத்தாகும். மக்கள் திலகம் சினிமா உலகில் நிகழ்த்தியசாதனையை இன்று வரையாராலும் செய்யமுடியவில்லை. திரைப்படம் நல்ல கருத்தைச் சொல்லவேண்டும் என்று கருதினார்.

இன்றைய திரைப்படப் பாடல்கள் தமிழ் மொழிக்கு சேறு பூசிக்கொண்டிருக்கிறது. ஆனால் அன்று இயற்றப்பட்ட பாடல்கள் பெரும்பாலானவை அர்த்தமுடையதாகவே இருந்தன விதி விலக்காக சில இருந்திருக்கலாம் புரட்சித்தலைவரின் படப் பாடல்கள் இன்றும் விரும்பிக் கேட்கப்படுகின்றன. அவை காதல், தத்துவம், வீரம் நிரம்பிய பாடல்களாக காணப்படுகின்றன.

செஞ்சொற் செல்வன்

## இரா. செல்வவடிவேல்

- புத்தம் புதிய புத்தகமே உன்னைப் புரட்டிப் பார்க்கும் புலவன் நான்-காதல் ரசம்
- தூங்காதே தம்பி தூங்காதே நீ சோம்பேறிஎன்று பெயர்வாங்காதே-தத்துவமுத்து
- அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா-வீர கர்ஜனை.

இந்தப்பாடல்கள் காலத்தினால் அழியாதவை. இவை திரைப்படப்பாடல்களுக்கு இலக்கணங்கள் ஆகும். அண்மையில் நம் நாட்டுத் தேர்தல் களத்தில் எதிர் எதிர் அணிகளின் ஒலிபெருக்கிகளில் முழங்கியது ஒரே பாடலாகவே காணப்பட்டதை அனைவரும் அறிவர்

'எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே சொந்த நாட்டிலே'

1950 ஆம் ஆண்டு மலைக் கள்ளன் திரைப்படத்திற்கு எழுதப்பட்ட பாடல் இன்றும் செவிகளில் ரீங்காரம் இடுகிறது.

### வள்ளலாக வாழ்ந்தவர்

வள்ளல் நடித்தவர் மட்டுமல்ல மக்கள் திலகம்; வள்ளலாகவே வாழ்ந்து காட்டியவர் அவரது மரணசாசனம் (உயில்) யாரும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதது. எம். ஜீ ஆர் வீடு அமைந்த இராமாவரம் தோட்டத்தில் முடவர்களும், பார்வையற்றவர்களும் புது வாழ்வு பெறுகிறார்கள். இவ்வாறு ஒன்றல்ல, இரண்டல்ல எண்ணற்ற நற்பணிகள் எம் ஜீ. ஆரின். அறக்கட்டளையில் நடைபெற்று வருகின்றன. சொன்னதைச் செய்து காட்டியவர் எம். ஜீ ஆர். என்ற காரணத்தினால் தான் தமிழ் நாட்டு மக்கள் அவரை ஒரு தெய்வமாகவே கருதும் நிலை ஏற்பட்டது நடிகர்சோ. இராமசாமி தமிழ் நாட்டு மக்களின் குருதியில் எம் ஜீ ஆர். கலந்து விட்டார் எனக் குறிப்பிட்டதை நினைத்துப் பார்க்கின்றேன்.

### ஈழமக்களுக்கு உதவினார்

தமிழ் நாட்டின் முதல்வராக எம் ஜீ ஆர். இருந்த காலத்தில் ஈழமக்களுக்கு அரசியல் அல்லாத வழிகளிலும் உதவி செய்திருக்கிறார். யாழ்ப்பாணத்து மாணவர்கள் தமிழகக் கல்லூரிகளில் படிப்பதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். சென்னை இசைக் கல்லூரி ஈழ மாணவர்களை இணைத்துக்கொள்ள மறுத்த போது, புலமைப்பரிசில் வசதிகளுடன் இசைபயில வழியமைத்துக் கொடுத்தார்.

பொன்மனச் செம்மல்எனப்பட்ட அவர் ஈழமக்களுக்கு ஆற்றிய நற்பணிகள் என்றும் மறக்க முடியாதவை. இதன் காரணமாகவே நம் 'இதயக் குரல்' எம். ஜீ ஆரின் நினைவுடன் இருக்கிறது.

'தோன்றின் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை
நன்று'

என்ற திருக்குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் மக்கள் திலகம், அபிநயச் சக்கரவர்த்தி எம் ஜீ. இராமச் சந்திரன் ஆவார். அவர் நினைவு நம் உள்ளத்தில் என்றும் இருக்கட்டும். □

# அப்பாவி இளைஞர்களை விசாரணையின்றி
# தடுத்து வைத்திருப்பது அநியாயமான செயல்

## நீதியமைச்சருக்கு அமைச்சர் சந்திரசேகரன் கடிதம்

(கொழும்பு)

நாட்டைச் சீரழித்து வரும் யுத்தத்தினால் அனைத்துத் தரப்பினரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர். இதிலிருந்துமீட்சிபெற வேண்டுமானால் உடனடியாக யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான சந்திரசேகரன் நீதியமைச்சர் ஜே. எம். லொக்கு பண்டாரவுக்குஅனுப்பிவைத்துள்ளகடிதத்தில் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தற்போது தமிழ் இளைஞர்களில் ஆயிரக்கணக்கானோர் எவ்வித விசாரணைகளுமின்றி சிறைகளில் வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அப்பாவி இளைஞர்களின் வழக்குகள் பதியப்படாதது டன், விசாரணைகளுமின்றி தடுத்து வைத்திருப்பது அநியாயமான செயலாகும் எனவும் அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த கால அரசாங்கத்தினால்இத்தகைய பாதிப்பிற்கு. நூற்றுக்கணக்கான, மலையகத் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் ஆளாகியுள்ளனர்.

இவர்களை சட்டமா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தால் பெரும்பாலானோர் விடுதலை செய்யப்படுவர் என்பது உறுதி.

எனவே, கடந்த அரசாங்கத்தைபோல்அல்லாது ஐக்கிய தேசிய முன்னணி மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையினை மேலும் வலுப்பெற செய்வதற்கு நிரபராதிகளும், அப்பாவிகளும் பாதிக்கப்படாத வகையில் சிறையிலுள்ளோர் விடுதலை செய்யப்படவேண்டும் எனவும் அவர் அமைச்சரை கோரியுள்ளார். (உ)

## 50பேருக்கு மூக்குகண்ணாடி

(துன்னாலை)

யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகமும், யாழ். பல்கலைக் கழக சமூக மருத்துவத்துறையினரும் இணைந்து கடந்த ஞாயிறன்று கொட்டடி, நாவாந்துறையில் நடத்திய மாபெரும் மருத்துவ முகாமில் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

கண்ணாடிகளை வலி வடக்கு பிரதேச சபைத்தலைவர் திருமதி ஸ்ரீ பாஸ்கரன் அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# முஸ்லிம் இளைஞர் படுகொலை
# விவகாரத்தில் புதிய திருப்பம்

(கொழும்பு)

டிசம்பர்5ஆம் திகதி தேர்தல் தினத்தன்றுகண்டி, உடத்தலவின்ன என்னுமிடத்தில் 10முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட பரபரப்பான விவகாரம் மேலும் விசித்திரமும், மர்மமும் நிறைந்த திருப்பமொன்றைச் சந்தித்துள்ளது.

படுகொலை சந்தேக நபர்கள் இருவர் கண்கள் கட்டப்பட்டும், கை விலங்குகள் இடப்பட்டும் இரகசியமான இடமொன்றில் ஒரு இரகசிய குழுவொன்றினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடயம் இப்போது தெரியவந்துள்ளது

இவர்களில்ஒருவர்இராணுவ கோப்ரல்மற்றவர் சார்ஜன்ட்

இருவரையும், இக்குழுவினர் துருவித் துருவி விசாரித்து வருகின்றதுடன் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இவர்கள் அடிக்கடி இடம்மாற்றப்பட்டு வருகின்றனராம்.

இந்த மர்மக் கொலைகள் தொடர்பான முழுமையான விபரங்களையெல்லாம் விசாரித்து அறிந்த பின்னர், இவர்களைத் தாம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் போவதாக இந்த இரகசியக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தாம் இவர்களை சட்ட விரோதமாக கடத்தியும் தடுத்து வைத்துள்ளதை ஒப்புக்கொள்ளும் இக்குழு மேற்படி உடத்தலவின்ன படுகொலைகளைமூடிமறைக்கும் முயற்சிகளுக்கு அஞ்சியே இச் செயலைச் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (உ)

## விபத்தில் கால் முறிவு

(மந்திகை)

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர், இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் மோதியதில் இடதுகால் முறிவடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்தசனியன்று நண்பகல் வேளை. அல்வாய் பாரதி தாசன் சனசமூக நிலையத்திற்கு அண்மையில் இடம் பெற்ற இவ் விபத்துச்சம்பவத்தில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த விஸ்வலிங்கம் திருஞானம் (வயது-55) என்பவரே கால் முறிந்த நிலையில் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டவராவார். (உ-23

## ஆடைகள் விநியோகம்

(மந்திகை)

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தினால், இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு அண்மையில் ஆடைகள் வழங்கப்பட்டன.

அவுஸ்திரேலியாவிலுள்ள மேற்படி ஆச்சிரமத்தின் பக்தர்களால் அனுப்பிவைக்கப்பட்ட ஒரு தொகுதி ஆடைகளே இவ்வாறு விநியோகிக்கப்பட்டதாக அதன் செயலாளர் சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார். (உ-3)

## மின்சாரம் இல்லை

(நவக்கிரி)

புத்தூர், சிறுப்பிட்டி ஆகிய பகுதிகளுக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படாமை குறித்து அப்பகுதி மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (உ-233)

## விவசாயிகள் கவலை

(காரைநகர்)

தொடர்ந்து பெய்துவரும் மழைகாரணமாக காரைநகர்ப்பகுதி நெல்வயல்களில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இதனால் நெற்பயிர்கள் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதிமக்கள் கவலையடைந்துள்ளனர். (உ-226)

## ஒளிவிழா

(ஈச்சமோட்டை)

நல்லூர் பிரதேச செயலகத்தின் 'ஒளிவிழா' நிகழ்வு, நாளை புதன்கிழமை பி. ப 2.00 மணிக்கு பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் என். வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-59)


**கவிஞர்களே!**

அனுப்பிவிட்டீர்களா?

**வலம்புரியின் ஆதரவில்**

**மூத்த பத்திரிகையாளர்**

**அமரர் சி. செல்லத்துரை**

அவர்களின்

**ஞாபகார்த்த சிறுவர் பாடல் போட்டி**

பாடல்கள் சொந்தக் கற்பனையில் சம காலத்துக் கேற்றதாக 4 அடிப் பாடல்கள் 5 இற்கு மேற்படாமல் எழுதி 31-12-2001இற்கு முன் வலம்புரி. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(ஆ-ர்)

# இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வெள்ளம்

## போக்கிடமின்றி பொதுவிடங்களில் தஞ்சம்

(மந்திகை)

தொடர்ந்து சில தினங்களாக பெய்துவரும் மழையினால் வடமராட்சிப்பகுதிகளிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வெள்ளம் புகுந்துள்ளன.

இதனால் முகாம்களில் தங்கியிருந்த மக்கள் ஆலயங்கள், பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

வடமராட்சிப்பகுதியில் கடற்கரைப்பகுதிகளிலுள்ள முகாம்கள் வெள்ளத்தில் மிதப்பதுடன் மலசலகூடங்கள் கிணறுகள் நிரம்பி வழிகின்றன.

தவிர தொடர்சியாக பெய்துவரும் மழையால் வெள்ளம் ஓ'-முடியாது வீதிகளை மேவிபாய்ந்தவண்ணமுள்ளது:

பருத்தித்துறை ஓ திமாதா கோயில் முகாமில் தங்கியிருந்த நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களும் சென் அன்ரனிஸ் முகாமில் தங்கியிருந்த 20 ற்கும்மேற்பட்ட குடும்பங்கள் கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் துன்னாலை கொட்டிக்காட்டு முகாமில் தங்கியிருந்த 30 ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அருகிலுள்ள பாடசாலையிலும், துன்னாலை மாதா கோவிலடி முகாமைச் சேர்ந்த மக்கள் துன்னாலை மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையிலும்தங்கியுள்ளனர்:

துன்னாலை வாலோடைப் பகுதியில் பனைகள் சரிந்து வீதிக்கு குறுக்கே வீழ்ந்துள்ளதுடன் மின் வயர்களும் அறுந்துள்ளதாக கிராம சேவையாளர் பிரதேச செயலகத்திற்கு அறிவித்துள்ளார்.

மழையால் இடம்பெயர்ந்து பொது இடங்களிலுள்ள மக்களின் நிலைமைகளை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி நேரில் சென்று பார்வையிட்டதுடன் அவர்களுக்கு உதவுவதற்காக அரச அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களை குடியமர்த்துவதில் கிராம சேவையாளர்கள் முனைப்புடன் செயற்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது. (உ-23)

## புடைவைக் கடையில் திருட்டு

(மந்திகை)

கொட்டும் மழைக்கும் மத்தியில் நெல்லியடி நாகர் பகுதியிலுள்ள புடைவைக்கடையொன்றுள் ஒடு பிரித்து உள்ளே நுழைந்த திருடர்கள் புடவைகளை திருடிச்சென்றுள்ளனர்:

இச்சம்பவம் வெள்ளியன்று இரவு நடைபெற்றுள்ளது:

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது: (உ-23)

## பதவி வெற்றிடம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

உதவித் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றியவர் ஒப்வு பெற்றதாலேயே மேற்படி வெற்றிடம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (உ-75)

### யாழ்.சிறையிலுள்ள இளம் பெண்ணை

## திருமலை உயர் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு

(யாழ்ப்பணம்)

யாழ்.குடாநாட்டில் இவ்வாண்டு முற்பகுதியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட தணிகாசலம் தவச்செல்வி என்ற இளம்பெண்ணை திருமலை உயர்நீதிமன்றுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட இப்பெண் தொடர்பான நான்கு வழக்குகள் திருமலை உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதால் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அங்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கும்படி யாழ்நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா யாழ் சிறைச்சாலை பதில் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளார்: (-10)

## கொள்ளையில் ஈடுபட்ட 7 மாணவர்கள் கைது

(கொழும்பு)

கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த 7மாணவர்களைஹம்பஹா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

20-25வயதிற்கு இடைப்பட்ட இம் மாணவர்கள் தனியார் இசை வகுப்புக்களிலிருந்து 8இலட்சம் ரூபா பெறுமதியான இசைக்கருவிகளை கொள்ளையிட்டுள்ளனர்.

இதேவேளை, கண்டிப்பகுதியில் 5பேரைக் கொண்ட கொள்ளைக் கோஷ்டி ஒன்று வீடொன்றினுள் நுழைந்து அங்கு3இலட்சம் ரூபா பணம் உட்பட12பவுண்தங்க நகைகளையும் கைத்துப்பாக்கி ஒன்றையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக கண்டிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-5)

## முகாமை செய்வது பற்றிய தொடர் கருத்தரங்கு

(துன்னாலை)

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களை முகாமை செய்வது தொடர்பான தொடர் கருத்தரங்கு தற்போது இடம்பெற்று வருகின்றது.

நேற்று ஆரம்பமான இக்கருத்தரங்கு, எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் பி.ப. 2 மணி முதல் 4 மணிவரை கரவெட்டி பிரதேச செயலக பணிமனையில் இடம்பெற்று வருவதாகவும்,

இதில் சம்பந்தப்பட்ட நலன்புரி நிலையங்கள் சார்பாக ஒவ்வொரு பிரதிநிதிகள் கலந்து கொண்டு முகாமைத்துவப் பயிற்சிகளைப் பெற்று வருவதாகவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன: (உ-41)

## தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சைகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைகள் திட்டமிட்டவாறு இடம்பெறாது என சமபந்தப்பட்ட வட்டாரங்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சை 27 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகுமென முன்னர் அறிவிக்ப்பட்டிருந்த போதிலும்,

இப் பரீட்சைக்குத் தோறும மாணவர்கள் பலர் நடைபெற்றுவருங்க.பொ.த(சா/த) பரீட்சைக்கு தோற்றுவதால் ஜனவரி மாதம் இறுதிப் பகுதியில் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்மாதம் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களினஆண்டிறுதிப் பரீட்சையும் மேற்படி காரணத்தினால் ஜனவரி மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படடிருப்பதாக அறிவிக்கப்பட்டுளளது. (உ-226)

## காவலூருக்குப் பகலிலும் மின்சாரம் வேண்டும்

### பலதரப்பில் இருந்து கோரிக்கை

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறையில் உள்ள மின்பிறப்பாக்கி மூலம் வழங்கப்படும் மின்சாரத்தினை பகலிலும் வழங்கப்படவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறையில் உள்ள அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக பகல் வேளையில் மின்சாரம்வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது:

தற்பொழுது இரவு வேளைகளிலேயே மின்சாரம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது:

சிறுதொழிற்சாலைகள் பயன்படுத்துவதற்கும் அலுவலக கடமையின் போது கணனியினை பயன்படுத்துவதற்கும் ஏதுவாகவே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது: (உ-75)

### காணாமல் போனோர் சங்கத்தின்

## மறியல்போராட்டத்திற்கு யாழ். பல்கலை மாணவர் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

காணாமல்போனோர்பாதுகாவலர் சங்க ஏற்பாட்டில் யாழ் செயலகத்தை முற்றுகையிட்டு நடத்தப்படும் மறியல் போராட்டத்துக்கு தமது முழுமையான ஆதரவைவழங்குவதாகயாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகஒன்றியம் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணக் குடா நாட்டில் அதிபர் சந்திரிகா அரசின் ஆட்சிக் காலத்தில் குறிப்பாக 96-97 காலப்பகுதியில் அரச படைகளால் கைது செய்யப்பட்டு காணாமல் போன பல நூற்றுக்கணக்கான தமதுஉறவினர்களின் நிலை தொடர்பாக உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டுமெனக் கோரி கைதுசெய்யப்பட்டுகாணாமற்போனோர் பாதுகாவலர் சங்கமும் அன்னையர் முன்னணியும் நேற்று ஆரம்பித்திருக்கின்ற மறியற்போராட்டத்திற்கு யாழ் பல்கலைக்கழகமும் வேண்டிய வழிகளில் தோள் கொடுக்கத் தயாராக இருக்கின்றது:

சமாதானத்திற்கானயுத்தம் என்ற போர்வையில் யாழ் குடாநாடு சந்திரிகா அரசின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட பின்னர் ஆக்கிரமிப்புக்குமுகம் கொடுக்க முடியாமல் அஞ்சி குடா நாட்டிலிருந்து மக்கள் வெளியேறிக் கொண்டிருந்த சமயம் மக்கள் அரசபடைகளால் தடுத்து நிறுத்தப்பட்டு மீண்டும் எதிரிகளின் இரும்புப்பிடிக்குள் வாழுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதிபர் சந்திரிகாவினதும் அரச படைகளினதும் நயவஞ்சகத் திட்டத்திலிருந்து எமது மக்கள் மீள முடியாதவாறு பொறியிடப்பட்டனர். சிறைப்படுத்தப்பட்ட மக்கள் குடியேறியது பாதி குடியேறாத பாதியாக கொடுமைக்குள்ளாக்கப்பட்டனர். வயதுவேறுபாடுஇன்றி பால் வேறுபாடு இன்றிஇனவாதஇராணுவத்தின்கொலைவெறிக் கண்களுக்குள் அகப்பட்டோர் போக்கிலும் வரவிலும்தெருக்களிலுமதிண்ணைகளிலும் கைது செய்யப்பட்டனர் மனிதர்களால் ஜீரணிக்க முடியாத கொடூரமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு பலர் படுகொலை செய்யப்பட்டனர் மிகுதிப் பேர்இன்னமும் அரசசிறைகளில் தினமும் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் இறந்து போன தமது உறவினர்களின் நிலை என்னவென்று இன்னமும் தெரியாத நிலையில் தினமும் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றார்கள் இவ்வாறு திக்குத் தெரியாத நிலையில் மனவேதனையுடன் உழன்று கொண்டிருக்கும் மக்களின்பிரச்சினைகளை அரசிடம் கொண்டு சென்று உரிய தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டியஅரச உயர் அதிகாரிகள் தமது கதிரைகளை இறுகப் பற்றிப் பிடித்தபடி துன்பப்படும் மக்களின் அவல நிலையினைக் கண்டும்காணாதது போன்று காலம் கடத்திவருகின்றனர்:

புதிதாக ஆட்சி பீடமேறியிருக்கும் ஐ.தே.முன்னணி அரசு இனப்பிரச்சினைக்கு உரியதீர்வினை உடன்காண வேண்டும்: கைது செய்யப்பட்ட அனைவரினதும் விபரங்கள் சம்மந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். படுகொலைக்குள்ளாக்கப்பட்டவர்களின் கொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் படுகொலை செய்யப்பட்ட நபர்களின் குடும்பத்தவர்களுக்கு உரிய நட்டஈடு வழங்கப்படவேண்டும்; உயிருடன் தடுப்புக் காவலில் இருப்பவர்கள் மிகவிரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும்;

புதிய அரசுஇந்த அநீதிக்கு உரிய நடவடிக்கையை எடுப்பதனை விடுத்து. கடந்தகால ஆட்சியாளர் மீது சேறுபூசுவதற்கு ஒருவாய்ப்புக்கிடைத்து விட்டதாக எண்ணி இவ்விவகாரத்தினை தமது சுய அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்திக் கொண்டு காணாமல் போனோரின் விவகாரத்தினை கிடப்பில்போடுவார்களாயின் சந்திரிகா அரசுக்கு ஏற்பட்ட கதியேஇன்றையஅரசுக்கும் சம்பவிக்கும்.

தமதுஇழந்த இரத்தஉறவுகளின் நிலையை எண்ணித் தினமும் தவித்துக்கொண்டிருக்கும் தமதுதமிழ் உறவுகளின் இந்தபிரச்சினைக்கு இத்துடன் ஒருதீர்வு காணப்பட வேண்டும் அவ்வாறு முடிவு காணப்பட வேண்டுமாயின் இன்று முன்னெடுத்திருக்கின்ற மறியல் போரின் தீவிரத்திலேயே அதுதங்கியுள்ளது. அதற்கான மக்களாதரவிலேயே அதுதங்கியுள்ளது: மக்களின் மனவுறுதியிலேயே அது தங்கியுள்ளது என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

### ஜனாதிபதி சந்திரிகா

## பாராளுமன்றில் பதிலளிக்கும் வகையில் புதிய சட்டம்

(கொழும்பு)

நீதிமன்றத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் பதிலளிக்கத் தக்கவராக ஜனாதிபதி இருக்கும் வகையில் அதனை அமுல்படுத்துவதற்கு புதியசட்டத்திருத்தம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.தே.முன்னணியில் தேர்தல வாக்குறுதிகளில் ஒன்றான இதனை அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளை அரசியல்விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்கொள்வார்.

ஜனாதிபதி தன்மீது எஸ்.பி.திசாநாயக்க சுமத்திய போக்கிரி எனும் குற்றச்சாட்டுப்பற்றி விசாரிக்கப்பட வேண்டுமென்று கோரியுள்ளார்;

இவ்வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கும் ஜனாதிபதி மீதுள்ள சட்டக்காப்புரிமை நீக்கப்படுதல் முக்கியமானதாகும்.

இச்சட்டதிருத்தத்தினை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவைப்படும். இதுவிடயத்தில் பொ.ஐ.மு யும், ம.வி.மு. யும் கூடஒத்துழைப்பை வழங்கும் என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன, (உ)

### இன்று ஒரு தகவல்

## குறைசொன்னால் வெறுப்பு

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான்; அவன் எந்தச் செயல் செய்தாலும் அமைச்சன் ஒருவன், ''அரசே! நீங்கள் இப்படிச் செய்திருக்கக்கூடாது'' என்று குற்றங் குறைகளையே சொல்லிக் கொண்டிருந்தான். அரசனும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். அமைச்சனும் தன் இயல்பை மாற்றிக் கொள்வதாக இல்லை. பொறுமை இழந்த அரசன் அமைச்சனைப் பதவியிலிருந்து நீக்குவது அல்லாமல் அவனைக் கொன்றுவிடுவது என்ற முடிவுக்கும் வந்தான்.

இதை அறிந்த அவன் தாய் அவனை அழைத்தாள், ''மகனே! நான் கேள்விப்பட்டது உண்மையா? நீ அந்த அமைச்சனைக் கொல்லப்போகிறாயா?'' என்றுகேட்டாள். ''ஆம்! அம்மா நான் என்ன செய்தாலும் குறை சொல்வது அவன் வழக்கமாகிவிட்டது. நான் குறிப்பாகவும் சொல்லிவிட்டேன். வெளிப்படையாகவும் சொல்லிவிட்டேன். அவன் தன்னை மாற்றிக்கொள்ளவ இல்லை. எனக்கு எரிச்சல் ஊட்டிய அவன் இறக்கத்தான் வேண்டும்'' என்றான் அவன்.

''உன்னை மிக உயர்ந்தவனாக நினைக்கும் அமைச்சனையா கொல்லப் போகிறாய்?'' என்று கேட்டாள் தாய். ''என்னம்மா சொல்கிறாய்? எனக்கு விளங்கவில்லை. என்னை எப்பொழுதும் குறை சொல்லும் அமைச்சன் என்னை உயர்ந்தவனாக நினைக்கிறானா? நம்பமுடியவில்லையே'' என்றான் அரசன். மகனே தன்னைத் திருத்திக் கொள்ளும் உயர்ந்த பண்பு உடையவர்களிடம் தான் பெரியவர்கள் குறைகளைச் சொல்வார்கள். உன்னிடம் அந்த நற்பண்பு இருப்பதாக எண்ணித்தான் அமைச்சன் உன்னைக் குறை சொல்லியிருக்கிறான்'' என்று விளக்கினாள் தாய். இதைக் கேட்ட அவன் ''அம்மா! பெருந் தவறு இழைக்க இருந்தேன். அதைத் தடுத்து விட்டாய்'' என்று சொல்லி விட்டுச் சென்றான்.

பேராசிரியர் எ. சோதி

# இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் உள்ளபோது சமாதான முயற்சிகள் சாத்தியப்படாது

## அ. இ. பொ. ஊழியர் முன்னணி தீர்மானம்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டம், பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம் என்பன அமுலில் இருக்கும்போது சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது பொருத்தமானதல்ல எனக்கோரும் தீர்மானமொன்றை அகில இலங்கை பொதுஊழியர் முன்னணி நிறைவேற்றியுள்ளது.

முன்னணியின் அரசியல் அதியுயர்பீடக் கூட்டம் தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் கல்முனையில் நடைபெற்றது. இதன்போதே இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள பாஸ் நடைமுறைகளை அரசு உடனடியாக நீக்கவேண்டும். வன்னி, மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டமையால் அங்கு மீண்டும் தேர்தல் நடத்தப்படவேண்டும். வடமாகாண புனர்வாழ்வு அமைச்சை மீண்டும் ஏற்படுத்தவேண்டும் ஆகியன உட்பட கடந்த ஆறுவருடங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்ட அரச ஊழியர்களுக்கு புதியஅரசு நிவாரணம் பெற்றுக்கொடுக்க வேண்டும் போன்ற பல தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இத்தீர்மானங்களின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் ஜனாதிபதிசந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிற்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக முன்னணியின் செயலாளர் கே. நடராஜா தெரிவித்தார். (உ-5)

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைதிகளைச் சந்தித்தனர்

(கொழும்பு)

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பிரமுகருமாகிய தங்கவடிவேல் (வெளமலை) ஆகியோர் களுத்துறைச் சிறைச்சாலைக்கு அண்மையில் சென்றனர்.

தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் எந்தவித குற்றமும் சுமத்தப்படாமல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 350 இற்கும் மேற்பட்ட கைதிகளையும் சந்தித்து இவர்கள் உரையாடியுள்ளனர். (உ-4)

## பொலிஸார் மீது தாக்கு ஒருவர் மரணம்

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவுக்கு கிழக்கேயுள்ள விட்டுவெவ பகுதியில், நேற்று முன்தினம் மாலை 3.30மணியளவில் பொலிஸ் கான்ஸ்ரபிள் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

பொலிஸ்நிலையத்திலிருந்து காவலரண் ஒன்றிற்கு மேற்படி பொலிஸார் இருவரும் சைக்கிளில் சென்ற போது பற்றையில் மறைந்திருந்த விடுதலைப் புலிகளே இத் தாக்குதலை மேற் கொண்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காயமடைந்த பொலிஸார் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அப் பகுதி முழுவதும் படையினரால் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தப்பட்டது. (உ-4)

## டிரோன் பெர்னாண்டோ சார்க் உச்சி மாநாட்டிற்கு தலைமை தாங்குவார்

(கொழும்பு)

எதிர் வரும் ஜனவரி 2 ஆம் திகதி நேபாளத் தலைநகர் காட்மண்டுவில் ஆரம்பமாகவுள்ள 22 வது சார்க் உச்சி மாநாட்டிற்கு வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தலைமையிலான தூதுக் குழுவொன்று அங்கு செல்லவுள்ளது.

தற்போது சார்க் மாநாட்டின் தலைமைப் பொறுப்பை இலங்கை வகிப்பதால் டிரோன் பெர்னாண்டோவை இம் மாநாட்டிற்குத் தலைமை தாங்குமாறு நேபாளப் பிரதமர் சேர் பஹதூர் கேட்டுள்ளார். (இ-5)

ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறும்

## நண்பருக்கு கசிப்புஎடுத்து சென்ற நபர் அகப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் தனது நண்பரைப் பார்க்கச் சென்ற ஒருவர், நோயாளியான நண்பருக்குக் கொடுப்பதற்கு கசிப்பை எடுத்துச் சென்ற சம்பவம் கடந்த ஞாயிறன்று இடம்பெற்றுள்ளது.

மேற்படி கசிப்பை எடுத்துச் சென்ற நபரின் நடத்தையில் மாறுபாடு தோன்றவே, சந்தேகமுற்ற பாதுகாப்பு ஊழியர்கள் அவரைத் தீவிரசோதனைக்குட்படுத்தியபோது இவ் உண்மை வெளிப்பட்டது.

இதனையடுத்து கசிப்பு நிலத்தில் ஊற்றப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட நபர் எச்சரிக்கை செய்யப்பட்டார். (உ-19)

## வெங்காயப் பயிர் வெள்ளத்தால் நாசம்

(துன்னாலை)

தொடர்ந்துபெய்து வரும் மழையினால் வடமராட்சிப் பகுதி பயிர்ச் செய்கையாளர்கள் பெரும் ஏமாற்றத்திற்குள்ளாகியுள்ளனர்.

வடமராட்சியின் வல்வெட்டித்துறை, குஞ்சர்கடையடி முடக்காடு, மந்திகை, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் பெருமளவில் செய்கை பண்ணப்பட்டிருந்த வெங்காய மற்றும் புகையிலைப் பயிர்கள் அவற்றின் மேலாக நீர் தேங்கியுள்ள நிலையில் அழிவுக்குள்ளாகியிருப்பதாக கூறப்படுகிறது. (உ-41)

## பரமேஸ்வரன் ஆலயத்தில் திருவெம்பாவை

(நல்லூர்)

யாழ்.பல்கலைக்கழக ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் திருவெம்பாவை பூசை சிறப்புற நடைபெற்று வருகிறது. (எ-103)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தெரிவு பரீட்சை புதனன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையினை நீக்கும்பொருட்டு, பகுதி நேர ஆங்கில ஆசிரியர் தெரிவுக்கான பரீட்சை நாளை புதன் கிழமை காலை 9.30மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்பும் வகையில் அண்மையில் கோரப்பட்ட விண்ணப்பங்களின் பிரகாரம் தகுதியானவர்களுக்கு அனுமதியட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்தார். (உ-9)

## பாதீனியம் பரவல்

(நீர்வேலி)

கோப்பாய் நீர்வேலிப் பகுதிகளில் பாதீனியம் வெகு வேகமாகப் பரவி வருவதாக அப்பகுதி வாசிகள் புகார்தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் இப் பாதீனியம் பெருமளவில கட்டுப்படுத்தப்பட்டிருந்தும் தற்போதைய மழையை அடுத்து மீண்டும் பாதீனியம் பரவி வருகிறது.

விவசாயதிணைக்களம், மற்றும் பொது அமைப்புக்களின் துணையுடன் பாதீனியத்தை ஒழிப்பதற்கு முன்வரவேண்டுமென அப்பகுதிமக்களமேலும் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-239)

## பாலம் இடிந்து வீழ்ந்தது; பஸ்சேவை ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கைதடிவீதியில் அமைந்துள்ள பாலம், கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையினால் இடிந்து வீழ்ந்துள்ளது.

இதனால், கைதடி மற்றும் சாவகச்சேரிக்கு இப்பாதையூடான பேருந்துச்சேவை கடந்த இரு தினங்களாக இடம்பெறவில்லை.

இந்நிலையினால், பொதுமக்கள பெரிதும் சிரமமுறுவதோடு, இதுவிடயத்தில் உடன் தீர்வுகாணப்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளனர். (உ-9)

## நடமாடும் வைத்திய சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்க் கிளையினரால், இவ்வாரம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில நடமாடும் வைத்திய சேவை ஒன்று நடத்தபபடவுள்ளது.

வைத்தியகலாநிதி வை. தியாகராசா இவ் வைத்திய சேவைக்கு தலைமை வகிக்கவுளளார். (உ-9)

## தேவகானம் இசை ஒலிப்பேழை வெளியீடு

(மீசாலை)

கத்தோலிக்க கலை இலக்கிய வட்ட தேம்பாவணி இசைக்குழுவின் 'தேவகானம' இசை ஒழிபபேழை வெளியீட்டு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப 3. 30 மணிக்கு மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம்பெறவுள்ளது.

கத்தோலிக்ககலைஇலக்கிய வட்டத் தலைவர் துரை ஆரோக்கியதாசன் தலைமையில்நடைபெறும்இவ்விழாவில் ஆசியுரையை யாழ். குரு. முதல்வர் ஜே. பி. சி. செல்வராஜா அடிகளாரும், மதிப்பீட்டுரையை அருட்பணி அன்புராஜும் சிறப்புரையை கலாநிதி என். சண்முகலிங்கனும் நிகழ்த்தவுள்ளனர்.

ஒலிப்பேழையை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வெளியிட்டு வைக்கவுள்ளார். (உ-229)

## புராண படனம்

(நல்லூர்)

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேச்சியம்பாள்) தேவஸ்தானத்தில் திருவெம்பாவையையொட்டித், திருவாதவூரடிகள்புராணபடனம், நடத்தப்பெற்று வருகிறது.

இளைப்பாறிய அதிபர் எஸ். சதாசிவம், கவிஞர் இராசையா குகதாசன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டு புராண படனம் செய்துவருகின்றனர். (க-103)

### சிந்தனைக்கு விருந்து

**காய்ச்சியதேங்காய்நெய்ஊற்றினாள்**

பட்டப் பகலிற் பதுங்கிவந் தேயொருபெண்
மட்டும் இருந்தவீட் டிற்புகுந்து - கிட்ட அவள்
பக்கம்சென் றான் முகத்தில் காய்ச்சியதேங்
காய்நெய்யை
மிக்கவிரை வாய் ஊற்றி னாள்

-பழையவன்

### எத்தகைய நிலையையும்

# எதிர்கொள்ளத் தயார் நிலையில் எல்லையில் இந்தியப் படைகள்

## பாதுகாப்பு அமைச்சர் உறுதிப்படுத்துகிறார்

(புதுடில்லி)

இந்திய எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எத்தகைய நிலையையும் எதிர்கொள்ளத் தயாராக உள்ளதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

புதுடில்லியில் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றிற்குப் பேட்டியளிக்கையில்; பாகிஸ்தான் இந்திய எல்லைகளில் பெருவாரியான படைகளைக் குவித்து வருவதாகவும்,

இது மோதலைத் தொடங்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லையென்றும், அணுவாயுதங்களைப்பாவிக்கும் சந்தர்ப்பம் ஏற்படாதென்றும் தெரிவித்தார்.

புதுடில்லி நாடாளுமன்றத் தேர்தலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

(து)

### பாகிஸ்தானை

# பயங்கரவாத நாடாக அறிவிக்க அமெரிக்காவை இந்தியா கோரும்

(புதுடில்லி)

பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக அறிவிக்குமாறு அமெரிக்காவைக் கோரவுள்ளதாக இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி தெரிவித்துள்ளார்.

அடுத்தமாதம் அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் அங்கு ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை சந்தித்து இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது;

இந்திய நாடாளுமன்றத்தின் மீது பாகிஸ்தானின் ஆதரவு பெற்ற தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியமைக்கான பூரண ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் அவற்றை அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்ற தாக்குதலின் பின்னர், பாகிஸ்தான் மீது போர் தொடுக்கப்போவதாக இந்திய பிரதமர் வாஜ்பாய் அறிவித்திருந்த போதிலும் போர் நடவடிக்கையை இந்தியா முதலில் தெரிந்தெடுக்காது என்றும் உள்துறை அமைச்சர் கூறியிருந்தார்.

இதன் பின்னணியிலேயே முதற்கட்ட ராஜதந்திர நடவடிக்கையாக பாகிஸ்தானுக்கான தனது தூதுவரைத் திருப்பி அழைத்ததுடன் பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக அறிவிக்கும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் நம்பப்படுகிறது (உ-5)

# தலிபான்களை வளர்த்த பாகிஸ்தான் இன்று அவர்களின் எதிரியுடன்

(இஸ்லாமபாத்)

ஆப்கானிஸ்தானின் புனர்நிர்மாண வேலைகளுக்காகவும், மனிதாபிமான உதவிகளுக்காகவும் பாகிஸ்தான் 10 கோடி டொலர்களை உதவ முன்வந்துள்ளது.

இப்போது அமெரிக்க யுத்தத்தில் தோல்வியடைந்திருக்கும் தலிபான்களுக்கு முன்பு பாகிஸ்தான் பல ஆண்டுகளாக தாராளமாக உதவி வந்தது

## உலக தரிசனம்

ஆனால் இப்போது ஆப்கானிஸ்தானில் அமைக்கப்பட்டுள்ள புதிய அரசுடன் பாகிஸ்தான் புதிய உறவு நிலையை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறது;

அத்துடன் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தூதரகத்தையும் மாகாண தலை நகரங்களில் ஆலோசகர் அலுவலகங்களையும் திறப்பதற்கு பாகிஸ்தான் உத்தேசித்துள்ளதாகவும் தலிபானில் புனர்நிர்மாணத்திற்கான பொருள்களின் மீது ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்கவும் உள்ளது;

இதேவேளை, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துல் ஹசார் ஆப்கானிஸ்தான் புதிய அரசின் பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# சட்டவிரோதமாக தொழில் புரியும் இலங்கையரை வெளியேற கொரியா அறிவிப்பு

(தென்கொரியா)

தென்கொரியாவில் சட்டவிரோதமாக தொழில்புரியும் இலங்கையர்களை வெளியேறுமாறு தென்கொரிய அரசு அறிவித்துள்ளது. இதற்கான காலக்கெடுவாக டிசம்பர் 31 ஆம் திகதியை விதித்துள்ளது;

இக்காலக்கெடு முடிவடைந்ததும் அங்கு பணிபுரியும் இலங்கையர் அந்நாட்டை விட்டு வெளியேறாவிட்டால் கைது செய்யப்பட்டு கடும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகின்றது.

தென்கொரியாவில் 800இற்கும் அதிகமான இலங்கையர் சட்ட விரோதமாக பணியாற்றுகின்றனர். இவர்களில் பலர் விசா காலம் முடிவடைந்த பின்னரும் வேறு பல இடங்களில் தப்பிச்சென்று தொழில் புரிகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது;

(எ-19)

# ஜப்பான் கடற் பகுதியில் சந்தேகப்படகு மூழ்கடிப்பு

(ரோக்கியோ)

ஜப்பான் கடற்பகுதியில் இனந்தெரியாத படகு ஒன்று மூழ்கடிக்கப் பட்டுள்ளது.

இனந் தெரியாத படகொன்று அக் கடற் பகுதியில்வந்ததைக் கண்ட ஜப்பான்கரையோரப் பகுதிரோந்துப்படையினர் அதன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். என்றும் அதனால் படகு மூழ்கடிக்கப் பட்டது என்றும்தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அந்தப்படகின் பணியாளர் காப்பாற்றப் பட்டிருக்கிறார்கள் என்றும் படகை நிறுத்தும்படி ஜப்பான் கடற்படை அதிகாரிகள்கட்டளையிட்ட போதும் தப்பியோட முயன்ற போதே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

கப்பலில் சீன கடற்கொள்ளைக்காரர்கள் வந்திருக்கலாம் என்றும் அவர்கள் இறந்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது (து)

# தடையையும் மீறி அரபாத் பெத்தலஹேம் பயணம்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் அரசின் தடை உத்தரவை மீறி பாரம்பரிய வழிபாட்டை நடத்த பலஸ்தீனத் தலைவர் ஜசீர் அரபாத் பெத்தலஹேம் செல்ல இருக்கிறார்.

பலஸ்தீன தீவிரவாதிகளின் இஸ்ரேல் மீதான தாக்குதலைத் தடுக்க ஜசீர் அரபாத்தவறிவிட்டார் என்பதற்காக பெத்தலஹேமிற்குநத்தார் வழிபாட்டுக்கு அரபாத் செல்வதை இஸ்ரேல் தடுத்திருந்தது.

ஜசீர் அரபாத் வழிபாட்டிற்கு செல்வதற்கு தடை

விதிக்கப்படும் பட்சத்தில் அமெரிக்கா கடுமையான கண்டனத்தை இஸ்ரேல் மீது தொடுக்குமென்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

(து)

# ஆப்கான் அமைச்சில் பெண்கள்

(காபூல்)

பெண்களுக்கு அதிகார பலத்தை ஆப்கானிஸ்தான் வழங்கியுள்ளது.

பெண்கள் இருவர் இடைக்கால அரசாங்கத்தில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்;

(எ)

## விளையாட்டு செய்திகள்

### ஆறுஒருநாள்

# போட்டிகளில் பங்கேற்க இங்கிலாந்துஅணிசம்மதம்

(புதுடில்லி)

இந்தியாவுடன ஆறு ஒருநாள்போட்டிகளில் விளையாட இங்கிலாந்து அணி சம்மதம் தெரிவித்துள்ளது.

தற்போது டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வரும் இங்கிலாந்து அணி பெங்களூர் டெஸ்ட் போட்டியை முடிந்துக் கொண்டு இங்கிலாந்து செல்லும் எனவும்,

கிறிஸ்மஸ், புத்தாண்டிற்குப்பின் ஜனவரி 12ஆம் திகதி மீண்டும் அந்த அணி இந்தியா வந்து ஒரு நாள் போட்டியில் விளையாடும் எனவும் தெரிய வருகிறது;

அறிவிக்கப்பட்ட அட்டவணைப்படி ஐந்து ஒருநாள் போட்டிகள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன; இப்போட்டிகளை பொறுப்பேற்று நடத்த எல்லா மாநில கிரிக்கெட் சங்கங்களும் போட்டி போட்டதால்அவற்றைநீடிக்க வேண்டும் என்று இந்தியா வந்த இங்கிலாந்து அணி நிர்வாகிகளிடம் கேட்கப்பட்டது அவர்கள்அதற்கு உடன்பட்டமையால் இங்கிலாந்து அணிமேலும்ஒரு போட்டியில் விளையாடவுள்ளது. இதனால் 6 டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ளன;

இதற்குப் பதிலாக வரும் மார்ச் மாதம் இங்கிலாந்து செல்லவுள்ள இந்திய அணி மூன்று டெஸ்ட் போட்டிகளுக்குப் பதிவாக நான்கு டெஸ்ட் போட்டிகளில் விளையாட வேண்டும்என்ற கோரிக்கையை இங்கிலாந்து முன்வைத்துள்ளது.

இதற்கு இந்திய அணி ஒத்துக் கொண்டால்மாத்திரமே இந்தியாவில் ஆறு ஒரு நாள் போட்டிகள் நடைபெறும்.

(எ-02)

# டெஸ்ட் தொடரில் இந்தியா வென்றது

(பெங்களூர்)

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கிடையே பெங்களூரில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது. இதன் மூலம் டெஸ்ட் தொடரை 1-0 என்ற நிலையில் இந்தியா வென்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 366 ஓட்டங்களைப் பெற்றது. பதிலிற்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 238 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதில் டெண்டுல்கார் 90 ஓட்டங்களையும் செவாக் 66 ஓட்டங்களையும் பெற்றனர். இங்கிலாந்து அணி சார்பான பந்து வீச்சில் ஹொக்காட், பாஸ்டர் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்;

இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து 33 ஓட்டங்களைப் பெற்றது. கடைசி நாளான நேற்று முன்தினம் தொடர்ச்சியான மழை காரணமாக ஆட்டம் நடைபெறவில்லை. ஆடுகளம் அதிக ஈரமடைந்தமையால் ஆட்டம் நடத்த முடியாத நிலையில் இரு அணித் தலைவர்களும் ஆட்டத்தை வெற்றி தோல்வி இன்றி முடித்துக் கொள்ள ஒத்துக் கொண்டனர்,

இரண்டு டெஸ்ட்போட்டிகளும் சமநிலையில் முடிவடைந்ததால் ஒருபோட்டியில் வென்ற இந்திய அணி இத்தொடரை 1-0 என்ற கணக்கில் வென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (எ-02)

# வெற்றிக் களிப்பில் மந்தமாக இருக்காதீர்

## ஸ்ரீவ்வோ எச்சரிக்கை

(கன்பெரா)

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக விளையாடிய முதலாவது டெஸ்ட் போட்டியில் அடைந்த வெற்றியைத் தொடர்ந்து வெற்றிக்களிப்பில் மந்தமாக இருக்க வேண்டாம் என்று அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீவ்வோ தனதுஅணியினரை எச்சரித்துள்ளார்

அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி முதலாவது டெஸ்ட் போட்டியில் 246 ரன்களினால்தோல்வியடைந்தது. இதைத் தொடர்ந்தே ஸ்ரீவ்வோ மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றதால் தென்னாபிரிக்க அணியை குறைத்து எடைபோட்டு விடக்கூடாது என்றும், அவர் எச்சரித்துள்ளார்.

இதேபோல் இந்தியாவுக்கு எதிரான முதல்டெஸ்ட்போட்டியில் வெற்றி பெற்று பின்னர் அடுத்தஇரண்டு போட்டிகளிலும் அவுஸ்திரேலிய அணி தோல்வியடைந்து தொடரை கோட்டை விட்டதை ஸ்ரீவ்வோ சுட்டிக் காட்டியுள்ளார்.

இரு அணிகளுக்குமிடையான இரண்டாவது டெஸ்ட் போட்டி மெல்போனில் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது (எ-2)

# சிறந்த வீரராக கோபிசந் தெரிவு

(புதுடில்லி)

இந்தியாவின், விளையாட்டு ஆங்கில வார இதழான 'ஸ்போட்ஸ் ஸ்ரார்' 2000 ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரராக பட்மின்டன் சம்பியன் கோபிசந்தைதெரிவு செய்துள்ளது.

இதற்காக அவருக்கு ஒரு லட்சம் ரூபா பணமும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படவுள்ளது.

இவ் வாண்டின் லெஜன்டப் ஸ்போட்ஸ் ஆக ஓட்ட வீராங்கனை பி.டி உஷா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்திய ஜூனியர் ஹாக்கி அணிக்கு இளம் சாதனையாளர் விருதும் வழங்கப்பட்டுள்ளது. (எ-02)

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை;

- குறள்

# வலம்புரி.

## இயேசு பாலனே சிறை மீட்க வருக

பாலகன் இயேசுவின் பிறப்பின் நாள் இன்று உலகம் முழுவதும் இத்திரு நாளை வழிபாட்டு ஆராதனைகளுடன் கொண்டாடுகின்றன. பாவத்தால் மூழ்கிப்போயிருந்த மக்களை மீட்பதற்காக இம் மண்ணில் இறைதூதனாக வந்துதித்த இயேசு பாலகன் மக்களின் பாவங்களைத் தானேசுமந்தார். ஒருகன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தைக் கொடு என்று கூறிய யேசுவின் வார்த்தைகள் என்று இம் மண்ணிலிருந்து அகன்றதோ அன்று முதல் உலகெங்கிலும் போர் அழிவுகள் தலைதூக்கிவிட்டன. கொலைக்குக் கொலை - பழிக்குப்பழி - சித்திரவதைக்குச்சித்திரவதை என பதில்கள் வழங்கப்படுமாயின் உலகம் இயங்குவது எங்ஙனம். என்பதை உலக மாந்தர்கள் ஒரு கணம்சிந்திக்க வேண்டும்.

உலக மக்களின் பாவங்களைத்தானேசுமந்து சிலுவை ஏறிய பரமபிதாவின் பாதையைப் பின்பற்றுவோர் இன்று உலகில் இல்லை எனலாம். உன்னைப் போல் பிறரையும் நேசி என்ற இயேசுவின் வார்த்தைகள் இன்று அச்சில் பொறிக்கப்பட்டு சுவர்களில் அழகாக ஒட்டப்பட்டிருக்கின்றனவே தவிர அதனைக் கடைப்பிடிப்பது யார் ?

அயல் வீட்டு உலை அணைந்து போயிருக்க ஆடம்பரமான செலவுகளுடன் சிற்றுண்டிகள் தயாரித்து பிறந்த நாள் கொண்டாடுகின்ற வேதனைகள் இந்த மண்ணில் நடந்துகொண்டிருக்கிறது. அயலவனின் வயிற்றுப் பசியை -ஒரு கணம்உணர்ந்து கொள்ளாத சமூகம் எந்த விடயத்தையும் அசட்டையாகவே கருதிக் கொள்ளும். இந்நிலையில் நாம் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தை கடைப்பிடிக்க வேண்டும். அத்தகைய ஓர் நல்ல சிந்தனையை இயேசு பாலனின் பிறப்புநாளான இன்றைய நத்தார் பண்டிகையில் நாம் அனைவரும் உறுதி எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

அதேபோல் நம் உடன் பிறப்புக்கள் பல வருடங்களாக சிறைகளில் அடையுண்டு நரக வேதனையை அனுபவிக்கின்றனர். அவர்களின் விடுதலைக்காகவும் நாம் இயேசு பாலகனை இந் நாளில் பிரார்த்திப்போம். எம்மவர்களை சிறை மீட்க அந்த மீட்பரை வருகவென அழைப்போமாக.

# உலகில் அன்பும் சமாதான சகவாழ்வும் மலர
# இயேசுவின் போதனைகளை ஏற்று வாழ்வோம்



இது ''கிறிஸ்மஸ்'' எனப்படுமநத்தார்க்காலம் எங்கும் ஒரே குதூகலம் கொண்டாட்டம் வாழ்த்துமடல்கள் கிறிஸ்மஸ் சொப்பிங் கிறிஸ்மஸ் கேக் பாலன் குடில்கள் கிறிஸ்மஸ் டெக்கறேசன் கிறிஸ்மஸ் மரம், நத்தார்பப்பா கரோல் கீதங்கள், வீட்டுத்தரிசிப்புக்கள் இப்படிப் பல விடயங்கள் இக்காலத்தில் நடைபெறும். மக்களின் இரட்சகராகப் போற்றப்பட்டு வரும் தேவனாகத் துதிக்கப்படுபவரும்நற் போதனைகளை வழங்கிய வள்ளலாக விளங்குபவருமாகிய யேசுக் கிறிஸ்து பிறந்து 2001 ஆண்டுகள் ஒன்றன் பின் ஒன்றாக ஓடி மறைகின்றன. அன்று அவர் பிறந்த போது விண்ணகம், மண்ணகத்திற்கு ஒரு செய்தி சொன்னது செய்திதான் என்ன? ஆம் கிறிஸ்துவின் பிறப்பின் நோக்கத்தை தெளிவுபடுத்தியது: அச்செய்தி இத்தனை ஆண்டுகளாக உலகின் திக்கெட்டும்ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

### யூதர்களின் மன்னர்

அன்று யூதேயர் நாட்டை பேரும் புகழுடனும் ஆண்ட ஏரோது மன்னனுக்கு ஒரு பெரும் பிரச்சினை தோன்றியது. எங்கிருந்தோ வந்த மூன்று ஞானிகள் பிரச்சினையைக் கிளப்பினார்கள். காலாகாலமாய் காத்திருந்த மெசியா பிறந்து விட்டார் என்று. ஆனால் ஞானிகளால் எங்கே பிறந்துள்ளார் என்பதனை அறியமுடியவில்லை. பல நாட்களாக தேடினார்கள், அலைந்து திரிந்தார்கள், களைப்படைந்தார்கள், இறுதியில் இவரும் ஒரு மன்னனாகவே பிறந்திருப்பார் என நினைத்து மன்னன் மாளிகை சென்று மன்னனையே கேட்டார்கள்; யூதரின் அரசன் பிறந்திருக்கிறாரே? அவர் எங்கே பிறந்துள்ளார்? அவரை காண முடியுமா? என்றனர்; இவர்கள் நினைத்தார்கள் பிறந்தது யூதரின் அரசர். அதனால் கிறிஸ்துவை பஞ்சுமெத்தையில் மாணிக்கத் தொட்டிலில் வளர்த்திருப்பார்கள். பொன்னும்பொருளும்மின்னிகொண்டிருக்கும். தோழிகள் சூழ நின்று தாலாட்டுப் பாடிக் கொண்டிருப்பார்கள். முரசு ஒலிக்க மத்தளம் முழங்க மணியோசை கேட்டுக கொண்டேயிருக்கும் என எதிர்பார்த்து மன்னன் மாளிகை சென்றனர். மன்னன் காதுகளில் மீண்டும் மீண்டும் அவ்வினா ஒலித்தது. அவனுக்கு ஒரே பயம். நானொரு மன்னன் இருக்க எனக்குத் தெரியாமல் இன்னொரு மன்னனா?

**எம். எஸ். ஏ. ஒஸ்வேல்ட்**
( உதவிக் கல்விப் பணிப்பாளர் )

மன்னன்இச்செய்திகேட்டு கலங்கினான். அவையின் அறிஞர்களை சட்டவல்லுநர்களை குருக்களை கூட்டுவித்தான். மன்னனின் பேரவை அவசர அவசரமாககூடியது; சட்ட நூல்கள் திருப்பப்பட்டன. மறைநூல்கள் புரட்டப்பட்டன. தத்துவ நூல்கள் தட்டப்பட்டன. தீர்க்கதரிசிகளின் வாக்குகள் மீட்கப்பட்டன. எல்லோரும் தேடினார்கள். கலந்துரையாடினார்கள். அவர்களின் காதுகளில் மீண்டும் ஒலித்தன. யூதேயா நாடுமுழுமையாக ஒலித்தது. அண்டைநாடுகளிலும் ஒலித்தது எங்கே இறைவா இருக்கின்றாய்? என்னை நீ எதற்கு அழைக்கின்றாய். எங்கே மீட்பராம் யேசு பிறந்துள்ளார்?

### இயேசு பிறந்தார்

பெத்தலேகம நகரில் மாட்டுத் தொழுவத்தில் எளிமையின் வடிவில் யேசுபிறந்துள்ளார். அவர்பேரோடும் புகழோடும்பிறக்கவில்லை, மாடிவீட்டில் கோடிஸ்வரனாக பிறக்கவில்லை. பஞ்சணை மெத்தையில் தவழவில்லை. நறுமணம் வீசும்காற்றைச் சுவாசிக்கவில்லை, அதிகாரத்தோடு அவதரிக்கவில்லை. விடுதிகளில் கூட இடமில்லாமல் மாட்டடையும் குடிலினில் ஓர் அகதியாகவே மண்ணில் அவதரித்தார் ஞானிகள் பொன். தூபம், வெள்ளைப் பேளம் கொண்டுவந்து துதித்தனர். இப்பிறப்பு விழா கிறிஸ்தவஉலகின் பெருவிழாவாகும்.

இவ்விழாவையாம் ஒருவரலாற்று செய்தியாகமட்டும் மாற்றிவிட்டோம், எம்மை மாற்றவில்லை. எம் அயலாரை நேசிக்கவில்லை. எமதுபொருளாதார அரசியல் அமைப்புக்களை மாற்றவில்லை சுயநலத்தை உடைத்தெறியவில்லை. மாறாக ஆடம்பரங்களில்எம்மை உள்ளடக்குகின்றோம். ஆடம்பரங்கள் இல்லாவிட்டால் நத்தார் கொண்டாட்டமல்ல என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். மனித இனத்தின் அழிவோ? புதிய உலகம் பிறக்கப்போகிறதோ என்று ஏங்கிக் கொண்டிருக்கும் 2001ம் ஆண்டின் இறுதிக் கட்டத்தில் உயிருக்கு உத்தரவாதமில்லை. போர் மேகங்கள், இடி இடித்துமழை போல் போர்புரிய உயிர்கள் போரினாலும் பசியினாலும். கருச்சிதைவினாலும். நோயினாலும் அநியாயமாக அழிகின்றது.

இதற்குகாரணம் நம் பிக்கை. விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, உண்மை அன்பு. நேர்மை, மனித உயிரிலுள்ள பாசம், சமாதான உணர்வு என்பன எம்மில் இல்லாததேயாகும்;

### கிறிஸ்துவின் ஒளியில் நடப்போம்

இருளின் பாதையில் செல்லும் யாம் கிறிஸ்துவின் நற்போதனைகளை பின்பற்றியும் நற்செய்தியை வாசித்துணர்ந்தும் கிறிஸ்துவின் ஒளியில் பிரகாசமாய் நடக்க முற்படவேண்டும். இந்நிலையில் வன்முறைகளை வெறுத்து. ஆயுத கலாசாரத்தைக் களைந்து, உயிர்களைக் காப்பாற்றுவோம் என்று திடசங்கற்பம் பூண்டு உண்மையான அன்பை வளர்த்து சமாதானத்தைப் பெற்று ஒற்றுமையாய் சகோதரத்துவத்துடன் வாழ்வோமாக.

புதிய ஆண்டில் அன்பில் ஓர் புதியபுரட்சிஏற்பட்டு பழையன கழிந்துபுதியன புகுந்து நல்லாட்சி வளர்ந்து ஆண்டவன் திருச்சபை உலகெங்கும் பரவி கிறிஸ்துவின் நற்செய்தி பாரெங்கும் ஒலித்து புதுவாழ்வுடன் புத்துயிர்பெற நத்தார் எமக்குத்தரும் செய்தியாக அமையட்டும்.

## சுகாதார மற்ற முறையில்
# பாண் விநியோகிப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்
### பரு.பொதுச் சுகாதார பரிசோதகர் எச்சரிக்கை

(மந்திகை)

பேக்கரிகளிலிருந்து பாண் மற்றும் உணவுப் பொருட்களை எடுத்துச் சென்று விநியோகிப்பவர்கள், பாண் எடுத்துச் செல்லும் பெட்டியை சுகாதாரமுறைப்படிபேணாதவிடத்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். செல்வரட்ணம் எச்சரித்துள்ளார்.

பாண் பெட்டிகளினுள்ளே அலுமினியத்தாலான கவரிடப்பட வேண்டும் எனவும் அதற்குநிரந்தரமாக மூடிபோடப்பட வேண்டும் எனவும் அறிவித்துள்ள அவர்,

எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படாத விநியோகஸ்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தியுள்ளார்;

(உ-23)

## தினசரி தியானம்
# சஹஜ நிஷ்டை

சட்டை யொத்த இவ்வுடலைத்
தள்ளுமுன்னே நான சகச
நிட்டையைப் பெற்று ஐயா
நிருவிகற்பங் காண்பேனோ?

- தாயுமானவர் -

சஹஜ நிஷ்டைக்கும் என் சிந்தைக்கும் வெகுதூரம். நான் ஏகமாய் நின்னோடிருக்கும் நாள் எந்த நாள்? இந்நாளில் அது முற்றுறாதோ?

அரசாங்க உத்தியோகத்தன் ஒருவன் தனதுசொந்தக் காரியம் போன்று எத்தனை யெத்தனை அலுவல்களையோ செய்து வருகிறான். ஆனால் தனக்கு அதிகாரம் வருவது அரசாங்கத்திடமிருந்து என்பதும், தான் செய்வதெல்லாம்: அரசாங்கத்தின் அலுவல்கள் என்பதும் அவனுக்கு நன்கு தெரியும் அதே விதத்தில் சஹஜ நிஷ்டையில் இருக்கிற ஒருவன் எண்ணிறந்தவியவகாரங்களுக்கிடையில் விசராந்தியில் இருக்கிறான்;

-ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

## பன்னெல சூட்டுச்சம்பவம்
# சந்தேகத்தின் பேரில் இராணுவ சிப்பாயும்கைது

(கொழும்பு)

பன்னெல பகுதியில் நேற்று முந்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானமை தொடர்பாகசந்தேகத்தின் பேரில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்;

இவர்களுள் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் இராணுவ சிப்பாய் ஒருவரும் அடங்குவதாக குளியாப்பிட்டி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்;

அத்துடன், சந்தேக நபர் ஒருவரது வீட்டிலிருந்து 7 வெற்றுத் தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-5)

# வெங்காயம் பயிர் அழிவு

(நவக்கிரி)

அச்சுவேலி, ஆவரங்கால், வளலாய், பத்தமேனிப் பகுதி விளை நிலங்களில் செய்கை பண்ணப்பட்டிருந்தஉருளைக் கிழங்கு மற்றும் வெங்காயப் பயிர்கள் தொடரும் மழையினால் அழிவடைந்துள்ளன,

(உ-233)

# கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவன் திவ்வியனை விடுதலை செய்க!

## யாழ் பல்கலைக்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பிரதமருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவன் திவ்வியனின் கைது தொடர்பாக யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

பிரதமர் ரணிலுக்கு அனுப்பி வைத்துள்ள அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டி ருக்கும் விபரம் வருமாறு,

கடந்த கால பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதி வருட மாணவனும் முன்னாள் பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய செயலாள ருமாகிய கிருஸ்ணசாமி திவ்வியன் இராணுவத்தினரால் கடந்த 02.07.2001 அன்று காரணமின்றி கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த யூலை மாதம் 2ஆம் திகதி திவ்வியன் இணுவில் பகுதியில் உள்ள தனது உறவினர் வீட்டுக்கு சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த சமயம் வழிமறித்த இராணுவத்தினர் திவ்வியனை ஆயுதங்களால் மிக மோசமாக தாக்கிய பின் கைது செய்தனர கைது நடவடிக்கையினை நியாயப் படுத்துவதற்காக திவ்வியனுக்கு புலிகளுடன் தொடர்பு இருந்ததாகவும், திவ்வியனிடம் இருந்து ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் பொய்ப்பிரசாரம் மேற்கொள்ளப் பட்டது. திவ்வியனும் மிக மோசமான சித்திரவதைக்கும், துன்புறுத் தலுக்கும் உள்ளாக்கப் பட்டு திவ்வியனுக்கு சம்பந்தமில்லாத குற்றங்கள் ஒப்புவிக்கப் பட்டு நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்து. ஆனால் கைது செய்யப்பட்ட காலப் பகுதியில் இங்கு பொறுப்பாக இருந்த மேஜர் ஜெனரல் தரத்திலான அதிகாரி ஒருவர் எமது பல்லைக்கழக பிரதிநிதிகளை சந்தித்து பேசியபோது திவ்வியன் தைது செய்யப்பட்ட போது எவ்விதமான ஆயுதங்களையும் வைத்திருக்கவில்லை எனவும் தாம் திவ்வியனிடம் இருந்து எவ்வித ஆயுதங்களையும் கைப்பற்றவில்லை எனவும் தெரிவித்து இருந்தார். தாம் திவ்வியனை சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்ததாகவும் தெரிவித்திருந்தார். மேற்படி திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்ட கைது நடவடிக்கையினால் திவ்வியனின் கற்றல் செயற்பாடுகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாணவர் மத்தியில் அச்சத்தையும் அதிருப்தியையும ஏற்படுத்தியுள்ளது. திவ்வியன் இன்னமும் தனது பல்லைக்கழக கல்வியை பூர்த்தி செய்யாத நிலையில் இருப்பதனால் திவ்வியனை விடுவித்து அவரது கல்வியை தொடர உரிய நடவடிக்கையை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் இந்த நாட்டின் பொறுப்பு மிக்க பிரதம மந்திரி என்ற வகையில் தங்களைக் கோருகின்றோம். நியாயமற்ற முறையில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள திவ்வியனை அவரது எதிர் காலத்தினைக் கருத்திற் கொண்டு அவரை விடுதலை செய்ய ஆவன செய்யுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

**புலிகளின்..**

நேற்று நள்ளிரவு 12மணியுடன் ஆரம்பமான யுத்த நிறுத்தம் ஒரு மாதகாலத்திற்கு மேலாக நீடிக்குமென நம்புகிறேன். வடபகுதிக்கான அத்தியாவசிய உணவு,மருந்துப் பொருட்களின் தடையை எதிர்வரும் பொங்கல் தினத்தின்பின் தளர்த்தவிருப்பதால் இந்த யுத்த நிறுத்தம் மேலும் நீடிக்குமென நான் நம்புகிறேன்.

வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தளபாடங்கள் தவிர்ந்த ஏனைய அத்தியாவசிய உணவு, மருந்துப் பொருட்களை அனுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. என்று கூறினார்.

சமாதானத் திட்டம் தொடர்பாக செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த பிரதமர் ரணில் சமாதானத் திட்டமானது அவசர அவசரமாக அமுல்படுத்தப்படக்கூடிய தொன்றல்ல.இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமானால் முதலில் அதற்கான அடித்தளம் அமைக்கப்பட வேண்டும். சமாதானத்திற்கான தேடலில் பல தடைகளையும் சிரமங்களையும் சந்திக்க நேரிடும் இவற்றையெல்லாம் வெற்றிகொள்ள வேண்டுமானால் சமாதானத் திட்டத்தின் அத்திவாரத்தை பலப் படுத்திக்கொண்டு ஒவ்வொரு அடியாக நிதானமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதற்கு முன்னோடியாக மனிதாபிமானப் பிரச்சினைகள் பல தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கமாக முன்னைய அரசு நோர்வே நாட்டின் உதவியை நாடி இருந்ததுமட்டுமல்லாமல் அதற்கு செயல் வடிவம் கொடுக்கப் பட்டது. இதே வழியையே நானும் பின் பற்றப் போகிறேன்.

புதியஅரசும், விடுதலைப் புலிகளும் ஒன்றுபட்டு இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு நோர்வேயைக் கேட்டுக்கொண்டால் நோர்வே மத்தியஸ்தம் வகிக்கத் தயாராக உள்ளது. இந்நிலையில் நோர்வேக்கான உத்தியோக பூர்வ அழைப்பு இவ்வாரத்தில் அனுப்பி வைக்கப்பட உள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்கள் கேட்டறியப்படுமென்றும் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தனது இந்திய விஜயத்தின்போது நாடு திரும்புவதற்கு முன் நேற்று பிரதமர் வாஜ்பாய், குடியரசுத்தலைவர் கே.ஆர்.நாராயணன், எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரையும். சந்தித்தபின் நேற்றிரவு கொழும்பு திரும்பினார். (வ)

**யுத்த..** இந்த யுத்த நிறுத்த தினத்தில் விடுதலைப்புலி உறுப்பினர்களை முகாம்களில் தங்கியிருக்குமாறும் யுத்த நிறுத்தத்தை தீவிரமாகப் பின் பற்றுமாறும் பிராந்தியத் தலைவர்களுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மீண்டும் அறிவித்துள்ளார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அறிவித்திருந்த "மோதல் தவிர்ப்பும்" நேற்று நள்ளிரவுமுதல் அமுலுக்கு வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

**பிறரை...** இடையர்களுமே தெய்வீக பாலனைத் தரிசிக்கச்சென்றனர். சென்றவர்கள் இறையருள் பெற்று அவரைத் துதித்துக் கொண்டு திருமபினர். மற்றையவர்களுக்கு அக்காட்சியைக் காண நேரமில்லை.! அவசரம், ஓட்டம், கழுத்தறுப்புப் போட்டி...!!

இதுதான் இன்றைய நிலமையும் கூட. இறைவனைத் தேட இறைவனின் வார்த்தைகளைச் சிந்திக்க அவகாசமில்லை. படிப்பு, கம்பியூட்டர்ப் பயிற்சி, உழைப்பு, மனிதனிற்கு நேரமே கிடைப்பதில்லை.!

மனிதன் துயரத்தைச் சந்திக்கும் வரை இறைவன் தாள் பணிவதில்லை. செல்வம், புகழ், அதிகாரம் என்பன பலரை நாஸ்திகர்களாக்கிவிடுகின்றன. ஆபத்து எதிர்கொள்கின்றபோது, துயரம் நெருங்குகின்றபோது அவன் இறைவன் முன் மண்டியிடுகின்றான். நரியின் குழிக்குள் விழுந்து விட்டபின் எவனும் நாஸ்திகனில்லை என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. (There is no athiest in the fox-hole.)

இன்று செல்வப் பெருக்கிலும் இராணுவ பலத்திலும் உச்சநிலையை அடைந்து விட்ட அமெரிக்காவில் பெரும் மாற்றம் , சாதனை வேட்கை, பொருளீட்டல், விண்வெளி ஆய்வு என்று அல்லும் பகலும் பாடுபட்ட அமெரிக்கர்கள், இன்று இறைவன் தாள்பணிந்து நிற்கின்றனர். கடந்த செப்ரெம்பர் பதினோராம்திகதி நடைபெற்ற நிகழ்ச்சிகள் அவர்களைச் சிந்திக்க வைத்து விட்டன. நாம் எங்கே போகிறோம்? எதனைத் தேடுகின்றோம்? எதற்காக அலைகின்றோம்? என்று அவர்கள் எண்ணிப் பார்க்கின்றனர். கூட்டம் கூட்டமாக தேவாலயங்களுக்குச் சென்றனர். வேதாகமத்தை துருவித் துருவிப் படித்தனர். நவம்பர் மாதம் நான் வாஷிங்டன் சென்றபொழுது விமான நிலையங்களில் வாலிபர்களும் வாலிப ஸ்திரீகளும் வேதாகமத்தை வாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். எங்கும் பக்தி வளர்ந்து வருகின்றது.

இறைவனைத் தேடுவதற்கு துன்ப அனுபவம் அவசியமா? அன்று தெய்வீக பாலனைத் தேடிய இடையர்களையும் ஞானிகளையும் போல் வாழ்விலும் தாழ்விலும் அவரை நினைப்போமாக.

கிறிஸ்மஸ் காலம் பிறரை மகிழ்விக்கும் காலமாகவும் இறைவனைப் பற்றிக்கொள்ளும் காலமாகவும் அமையட்டும்.

தெய்வீக பாலன் புது வருடத்தில் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக;

**வீதிச்சோதனை..**

எனினும் இராணுவத்தினரின் முன்னணிக் காவலரண்களில் இருந்து 500 மீற்றர் பிரதேசத்தினை இராணுவம் தனது பூரண கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதுடன் அப்பகுதியில் ரோந்து நடவடிக்கைகளையும், பதுங்கியிருந்து கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபடுவர். (வ)

**தமிழ..** வருகிறது என்று பலதடவைகளில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்ட போது தலைவர்களையும் அரசியல் நிலைப்பாடுகளையும் நம்பி ஏமாந்ததே எமது கதையாக வுள்ளது.

பெரும்பான்மை அரசியல் கட்ச்சிகள் கடந்த சில காலமாக தமிழ் மக்களை பணயம் வைத்தே வாக்குகளைக் கேட்டே வெற்றிகளைப் பெற்று தமிழ் மக்களையே பலிக் கடாவாக்கி இருக்கிறார்கள். வேறுவழியில்லாமல் நாமும் மாறி மாறி நம்பிக்கை வைத்து ஏமாந்து போயுள்ளோம்.

அண்மையில் விடுதலைப் புலிகளின் தலைவர் தமது மாவீரர் தின உரையில் "இப்பிரச்சினையை சமாதான வழிமுறைகள் மூலமாக தீர்க்கலாம் என்ற நம்பிக்கை இன்னும் எம்மிடம் முற்றாக இடிந்து போகவில்லை. சிங்கள அரசியல் தலைவர்கள் உண்மையாக உறுதியுடன் மனம் வைத்தால் சமாதான மும் இணக்கப்பாடும் ஏற்படும் சாத்தியம் உண்டு" என்று தெரிவித்திருப்பது நம்பிக்கை தருவதாக இருக்கிறது நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் சுபீட்சமான சுதந்திரமான எதிர் காலத்தை மனதிற் கொண்டு தெளிந்த மனதோடு எமது வாக்குகளை வீணாக்காமல் சரியான விதமாக பயன்படுத்துவோம் என்ற எமது அழைப்பை தமிழ் மக்கள் சரியான விதமாகவே பயன்படுத்தி யுள்ளார்கள்.

தமிழ்க் கட்சிகள் கூட்டிணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்றமை பாராட்டிற் குரியது. இந்தக் கூட்டு முயற்சியைத் தொடர்ந்தும் பாதுகாத்து பேணவேண்டியது அவசியமாகும். ஏனைய தமிழ்க் கட்சிகளும் இக் கூட்டணியுடன் இணைந்து தமிழ் மக்களின் விடிவுக்கு உதவ வேண்டும்.

நடந்து முடிந்த தேர்தலில் இனவாதத்தையும் வன்முறையையும் தூண்டும் விதமாக செயற்பட்ட கட்சிகள் தூக்கி எறியப்பட்டமை தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் அவசரத் தீர்வு காணப்படவேண்டும் என்பதையும் இனியும் இப்பிரச்சினை களை வளர்த்து அரசியல் இலாபம் காணமுடியாது என்பதை தெளி வாக்கியுள்ளது.

புதிய பிரதமர் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள் அரசு தன் மீது பொறிக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்பை நீதியோடும் நடுநிலமையோடும் அணுகி தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணுவர் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

தமிழ் மக்களின் சுபிட்சமான எதிர்காலத்தை மனதிற் கொண்டு இனப்பிரச்சினையை முதன்மையான பிரச்சினையாக அணுகி இந் நாட்டில் தமிழ் மக்கள் சுதந்திரத்தோடு வாழ ஓர் நிரந்தரத் தீர்வினை தரவேண்டும் என புதிய பிரதமரை தமிழ் மக்கள் அனைவர் பேராலும் வேண்டிக் கொள்கிறோம். தமிழ் மக்கள் அனைவரின் ஏக்கமும் வேண்டுதலும் இதுவே ஆகும்.


**யாழ் மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் நடாத்தும்**



**தேவி பரமலிங்கம்**

எழுதிய

**அணிதிரளும் சிறு அலைகள்**

**நாவல் நூல் வெளியீடு**

இடம்: நாவலர் கலாசார மண்டபம், நல்லூர்.
காலம்: இன்று (25.12.2001) செவ்வாய்க்கிழமை.
நேரம்: காலை 9.00 மணி முதல் (புதிய நேரம்)

தலைமை: **திரு சி.அ. சிவலிங்கம்**
(தலைவர்: யாழ் மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்)
பிரதம விருந்தினர்: கலாநிதி எஸ். சிவலிங்கராஜா அவர்கள்
(தமிழ்த் துறைத்தலைவர் - யாழ் பல்கலைக்கழகம்)
வெளியீட்டுரை: கலாநிதி க. குணராசா அவர்கள்
(பிரதேச செயலர் சங்கானை)
முதற் பிரதி பெறுபவர்: வண - பிதா எஸ். ஜெயக்குமார் அடிகள்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**நிர்வாகம்**

யாழ் மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்
30, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம். (4103)



**மண்ணுலகை மீட்க, விண்ணுலக மைந்தன் மண்ணில் உதித்த இந் நாளில் அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த**

**நத்தார்-புதுவருட நல்வாழ்த்துக்களை**

**மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**திருமறைக் கலாமன்றம்**

நடாத்தும்

**ஒளி விழா**

காலம்: **28-12-2001 வெள்ளிக்கிழமை**
நேரம்: **மாலை 6.30 மணி**
இடம்: **திருமறைக் கலாமன்ற அரங்கு**

**நிகழ்ச்சிகள்**

- தேவாலயங்களின் பாடகர் குழாம்கள் பங்குபற்றும் **கரோல் கீதங்கள்**

பங்குபற்றும் ஆலயங்கள்

புனித அந்தோனியார் ஆலயம் - பாஷையூர்
புனித யுவானியார் ஆலயம் - புனித திரேசாள் ஆலயம். சுண்டுக்குளி
புனித யாகப்பர் ஆலயம் - குருநகர்
புனித ஆசீர்வாதப்பர் ஆலயம் - நல்லூர்
பரி. யாக்கோப்பு ஆலயம் - நல்லூர்

- கிறிஸ்மஸ் நாடகப் பிரதியாக்கப் போட்டி பரிசளிப்பு
- நாட்டிய நாடகம்
- விடியலின் பூபாளம் (நாடகம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2393

- திருமறைக்கலாமன்றம்.



**தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்**



**நிருத்திகா ஜுவலர்ஸ்**

*177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P No. 021-2694*



(C/2367)



இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2001ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.